வ.

மாகினி

தாந்தச் சஞ்சிகை

(முதல்தர நாவல்கள்)

து 3.] 1924வருஷம் பிப்ரவரிமீ 1வ [பகுதி 1.

ஞான செல்வாம்பாள் அல்லது
இரண்டு சகோதரிகள்.

ஸ்ரீமான்
ஆரணி-குப்புசாமி முதலியார் அவர்களால்
இயற்றப்பட்டது

26 MAR 1924

"ஆனந்தபோதினி" பத்திராதிபர்
நா. முனிசாமி முதலியாரால்
பிரசுரிக்கப்பட்டது

1924

ரிஜிஸ்டர்ட்] [காபிரைட்.

மன மோ

ஓர் மாதாந்த

இதில் இனிய நாவல்களே வெ
போதினிச்" சந்தாதாரர்களிற் பலர்
நாவலும் சிற்சில சஞ்சிகைகளில் விரை
நாவல்களை வெளிப்படுத்தி வரவேண்டுமெ
வருகின்றார்கள். அச்சஞ்சிகை பற்பல விஷ
வேண்டியதாயிருத்தலின், அதில் ஒவ்வொரு மாத
மூன்று பக்கங்களே நாவல் வெளியிடக்கூடியதா
ஞல் நம் நண்பர்களின் விருப்பம் நிறைவேறக் கூ
ஆதலின் நாவலுக்கென்றே ஒரு சஞ்சிகையை வெளி
தால், அது மேற்கூறியவர்களின் விருப்பத்தைப் பூர்த்
தோடு மற்றைய தமிழபிமானிகட்கும் திருப்தி யளிக்கக்
யிருக்குமென்று இத்னை 1922ஞு பிப்ரவரிமீ 1உ மு
பித்தோம். இதில் ஒவ்வொரு பெரிய நாவல் தொட
வந்து ஆறு மாதங்களுக்கொரு முறை ஒவ்வொரு மு
கம் முடிவுபெறும். ஒரு வருஷத்துக்கு ஐந்து ரூபா வி
புள்ள இரண்டு புத்தகங்கள் பைண்டாகிவிடும். இ
மகா அற்புதம் பொருந்திய அநேக நாவல்களின் ஆசிரிய
ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்
"அமராவதி" என்னும் நாவல் முதலில் வெளியாகி முடிந்த
இச்சஞ்சிகை கிரௌன் 80-பக்கங் கொண்டது. வருஷ சந்த
2-8-0 இரண்டரைதான். வெளிநாட்டிற்கு 3—0—0. 192
மார்ச்சுமீ 1உ முதல் இதே நூலாசிரியரால் வரை
"பவளத்தீவு" அல்லது "குடும்ப சாபம்" என்ற மிக்க அதி
மான நாவல் தொடங்கி, வெளியாகிவருகிறது. அடியிற்கண்
விலாசத்திற்கு உடனே எழுதி வெளியாகியுள்ள சஞ்சிகைக
வி-பி-யிலோ முன் பணம் அனுப்பியோ பெற்றுக் கொள்ளுங்க

முன் பணம் அனுப்பினுல் 2—8—0யும், மணியார்
கமிஷன் 1-அணுவுமாகும். வி-பி-யில் ரூபா 2—13—0 ஆகும்.

இது அநேக நாவல்கள் இயற்றிய ஸ்ரீமான் ஆரணி குப்புசா
முதலியார் அவர்களால் எழுதப்பட்டது. அவருடைய நாவலி
போக்கு எல்லோருக்குந் தெரிந்திருக்குமாகையால் மாதிரி காப்
அனுப்பப்படமாட்டாது.

மானேஜர்: "ஆனந்த நிலையம்"

நெ. 6, வெங்கடேச மேஸ்திரி வீதி, மதரா

"அம்மா! தங்கள் மனதிற்கு வியாகூலத்தை யுண்டாக்கத் தக்க ஏதோ சம்பவம் நேர்ந்திருக்கிறதென்று நினைக்கிறேன். அக்கிழவி..." என்றான். தாயார் மிக்க ஆத்திரத்தோடு "நீ எப்போது வந்தாய்...ஏனப்பா! எப்போது நீ வந்தாய்?" என்றாள்.

தேவராஜன்:—இரண்டு மூன்று நிமிடங்களுக்கு முன்பே வந்தேன்.

தாயார்:—என் அறைக்குச் சென்று பார்த்தாயோ?

தேவ:—ஆம். பார்த்தேன், நீ யங்கில்லை. அதன்மேல் இங்குவந்தேன். உன் குரலைக்கேட்டேன். நீ மிக்க ஆத்திரத்தோடு என்னமோ கூறிக்கொண்டிருந்தாய். அதன்மேல் நான் இங்கு வந்துவிட்டேன்.

தாயார்:—நான் ஏதோ கூறிக்கொண் டிருந்ததை நீ கேட்டாயா?

தேவ:—ஆம் அம்மா, நீ மிக்க ஆத்திரத்தோடு 'இது தான் கடைசி தடவையாக நான் உன் பிரியப்படிசெய்வது. இனி என் மனதில் தீர்மானம் செய்து கொண்டேன்' என்று கூறினதைக் கேட்டேன். ஏனம்மா! நீ யவளுக்குப் பயப்பட வேண்டிய காரணமொன்றுமில்லையே. அவள் உன்னைப் பயமுறுத்திப் பணம் கேட்க வில்லையே.

186588

தாயார்:—இல்லையில்லை. அப்படிப்பட்டது ஒன்றுமில்லை. அவள் பாபம் மிக்க ஏழ்மையான நிலைமையி லிருக்கிறாள். அவள் மனநிலைமை மிக்க பரிதாபமானது. அவள் தற்கொலை புரிந்து கொள்வே னென்கிறாள். இன்னும் என்னென்னவோ கூறுகிறாள்......

தேவ:—போதும் அம்மா போதும், இப்போது தெரிந்து கொண்டேன். அத்தகையோர் இப்படித்தான இரக்கமான மனமுடையோரைப் பயப்படுத்திப் பொருள்

பறிக்கப் பார்ப்பது. அத்தகையவளுக்கு மறுபடி தாங்கள் தங்களைக் காணக்கூட அனுமதி யளிக்கலாகாது.

தாயார்.—“இல்லையில்லை. மறுபடி அவளை யிங்கு உள்ளே விட அனுமதியே யளிக்கமாட்டேன்” என்றாள்.

அதன்பின் இருவரும் தோட்டத்தில் உலவச் சென்றார்கள். உலவிவிட்டு இருவரும் திரும்பி வந்தபோது, வேலைக்காரி தேவராஜைக் கண்டு “யாரோ ஒருவர் உன்னைக் காணவந்தார். நீ இல்லையென்றதே இதோ இச்சீட்டை யளித்துவிட்டுச் சென்றார். மாலைக்குள் வந்து தன்னைக் கண்டால் யாவும் பேசிக்கொள்ளலா மென்று கூறினார்” என்று கூறிக்கொண்டே ஒரு சிறு கடிதத்தை யவனிட மளித்தாள்.

தேவராஜு அதை வாசித்துப் பார்த்தபோது, அதில் “காப்டன் பிச்சையன் நெ. 33-வது மாடவீதி” என்று எழுதியிருந்தது. அதைப் பார்த்ததும் அவன் மனதில் “இவன் அச்சுதன் விஷயமாக வந்த ஆளே” என்று புலப்பட்டது.

தாயார் குழந்தாய் யார் அந்த ஆள்? என்றாள். தேவராஜு “அம்மா அந்த ஆள் சமீபகாலத்தில் நான் இருக்கும் உத்தியோக சாலையில் அமர்ந்திருக்கிறார்” என்றான்.

தாயார்—“அவருக்கு உன்னாலாகவேண்டிய வேலையென்ன இருக்கிறது. எங்கேனும் விருந்திற்கு அழைத்துக் கொண்டு போகவோ? அல்லது உன்னிலும் செல்வமுடைய நண்பர்களோடு சேர்ந்து கேளிக்கையாக ஏதேனும் செய்யவோ? அத்தகைய விஷயங்களுக்கு இடங்கொடுக்க மாட்டாயென்று நம்புகிறேன். ஏனெனில் அவர்களோடு சமமாக நடந்துகொள்ள உன்னி

டம் போதுமான செல்வமில்லை. ஒருவரிடம் விருந் திற்குச் சென்றால் மறுபடி அவர்களுக்குப் பதில் விருந்தளிக்க நமக்குச் சக்தியிருக்க வேண்டும். மேலும் நான் ஒருவரை யிங்குவரவேற்கும் நிலைமையி வில்லை என்பது நீயறிந்த விஷயமே'' என்றாள்.

தேவராஜன் அதற்குள் தன் கலக்கத்தை யடக்கிக் கொண்டு "இல்லை. என்னை அப்படிப்பட்ட விஷயங்களுக் கழைக்கும் அவ்வளவு நட்பு அவனுக்கும் எனக்கு மில்லை. அவன் உத்தியோக சங்கதி யேதேனும் என் மூலமாக அறிய விரும்புவதாக விருக்கும்'' என்றான். தாயார் "அப்படியாயின் நீ போய் அவரைக்கண்டு பேசிவிட்டு வரவேண்டியதே'' என்றாள்.

தேவராஜன் சுமார் இரண்டரை மணிக்குப் புறப் பட்டு காப்டென் பிச்சையன் இருக்கும் வாசஸ்தலத்திற் குச் சென்றான். காப்டென் பிச்சையன் சற்று குட்டை யான தடித்த மனிதன். இருபத்தாறு இருபத்தேழு வய திடையவன். அவன் தேவராஜைக் கண்டதும் மரியாதை யோடு,

"வாரும் உட்காரும், இப்போது தங்களிடம் நான் வந்திருந்தது இன்ன சங்கதியென்று தங்களுக்குத் தெரிந் தேயிருக்கும் என்று நம்புகிறேன். கனம் அச்சுதன் இந்த விஷயத்தில் அவருடைய நண்பராக என்னை நிய மித்திருக்கிறார்'' என்றான்.

தேவராஜன் "அப்படியாயின் நான் இதில் நடந்து கொள்ள வேண்டிய முறைமை யின்னதென்று எனக்குக் கூறும். ஏனெனில் இத்தகைய விஷயத்தில் நான் பிர வேசிப்பது இதுதான் முதல் முறை'' என்றான்.

காப்டென் " நீர் அச்சுதனுக்கு, மிக்க மனத்தாங்க லும் அவமானமும் உண்டாக்கி விட்டீராம்...இரும் இரும்

ஒரு சமாதானமும் கூறவேண்டாம். இதில் நண்பனு மிருப்பவன் யார்பட்சம் நியாய மிருக்கிறது என்பதைப் பற்றிச் சிந்திக்க வேண்டியவனல்ல. தாங்கள் இப்போது என் நண்பரிடம் தாராளமாக மன்னிப்பு கேட்டுக்கொள்ள வேண்டும். இன்றேல் இருவரும் விரோதிகளாகச் சந்திக்க வேண்டியதே" என்றான்.

தேவராஜு:-மன்னிப்புகேட்பது ஒருபோதும் முடியாது.

காப்டேன்:—சரி நீர் உமது நண்பரை யழைத்துவரவேண்டியதே. காலை யாறுமணிக்கு விவகாரம் முடிய வேண்டும். இடம் சமீபத்திலுள்ள தோட்டங்களில் இருக்கின்றன.

தேவராஜு:—சரி, எனக்குத் தெரிந்த ஒரு நண்பரிருக்கிறார். இபபோது இந்த விவகாரம் நடைபெற்றால் அக்கன்னிகையின் பெயர் வெளிவர லாகாது.

காப்டேன் பிச்சையன்:—"அதுவே என் நண்பருடைய விருப்பமும் ஆகையால் சங்கதி வெளிவர லாகாது; அப்படி ஏதேனும் நேரிட்டால் ஆபத்தில் சிக்கிய ஆள் அன்னிய நாட்டிற்குப் போய் கொஞ்சநாளிருந்து பிறகுவந்தால் ஒரு ஆபத்தும் நேராது" என்றான்.

அதன் பிறகு அவன் நாளைகாலை ஆறுமணிக்கு இருவரும் சந்தித்து யுத்தம் செய்ய வேண்டிய இடம் முதலிய எல்லா ஏற்பாடுகளைப் பற்றியும் கூறியபின், தேவராஜு அங்கிருந்து புறப்பட்டு தன் நண்பனாகிய சோமநாதன் என்பவன் வாசஸ்தலத்திற்குச் சென்று அவனிடம் சங்கதிகளைக் கூறினான். அவன் தேவராஜின் சிறுவயதைப் பற்றி சற்று பின்னிடைந்தான். ஆயினும் விபரமாகச் சங்கதியைக் கூறிய பின் ஒப்புக் கொண்டான்.

இந்த விவகார மனைத்தும் முடித்துவிட்டுத் தேவ

ராஜு தன் வீட்டிற்குச் செல்லும் போது இரவு எட்டு மணியாய்விட்டது. அவன் வீட்டிற்குள் நுழையும்போது தன் மனக்கலக்க மனைத்தும் மிக்க சாமார்த்தியத்தோடு அடக்கிக் கொண்டான். தாயார் அவனைக் கண்டதும் ஆவலோடு எதிர்கொண்டு வந்து "என்ன சங்கதி? ஏன் அந்த ஆள் உன்னை வரச்சொன்னார்?" என்றாள்.

தேவராஜு "வேறொன்று மில்லை. நான் கூறியபடி ஒரு உத்தியோக சமாசாரத்தைப் பற்றிக் கேட்கவே என்னை வரும்படி கேட்டுக்கொண்டார்" என்றான். இதைக்கேட்ட தாயார் சற்று மனக்கலக்க மொழிந்தா ளெனினும், அவள் மனதில் ஒரு சிறு சந்தேகம்மட்டு மிருந்தது. அதாவது, "நமது புத்திரனுடைய தயவு வேண்டியவன், தான் இங்குவராமல் இவனைத் தன்னிடம் வரும்படி எங்கேனும் தொந்திரவு கொடுப்பானோ" என்று ஐயமுற்றாள்.

அன்றிரவு தேவராஜுக்கு நித்திரை பிடிக்குமோ? அவன் மனதிலுண்டான கலக்கத்திற்கோர் அளவே யில்லை. நேயர்களே! இச்சந்தர்ப்பத்தில் இதைப்பற்றிய சில விஷயங்களை நாம் அறிவிக்க விரும்புகிறோம். அக்கா லத்தில் அந்நாட்டில் ஒரு அநாகரீகமான வழக்க மிருந் தது. அதாவது ஒருவரை யொருவர் அகௌரவமாக நடத்தியதாகக் கருதினால் உடனே இருவரும் கத்தி கொண்டோ துப்பாக்கி கொண்டோ சண்டையிடுவது கௌரவமாகக் கருதப்பட்டது. அதற்குச் சம்மதியாத வன் கோழையாக யாவராலும் அவமதிக்கப் படுவான். இருவரும் சண்டையிட்டதில் எவன் ஜெயிக்கிறானோ அவன் பட்சத்தில் நியாய மிருப்பதாகக் கருதப்பட்டது. முதலில் அத்தேசங்க ளெங்கும் அது சாதாரண வழக்க மாக நடந்துவந்தது. பிற்காலத்தில் துரைத்தனத்தார்க்கு

அறிவுதித்து அப்படிச் சண்டையிடுவது குற்றமென்று அதற்குத் தண்டனை விதிக்கச் சட்ட மேற்படுத்தினர்கள். அதன் பிறகும் நெடுங்காலம் கள்ளத்தனமாய் இந்த விவகாரம் நடந்துகொண் டிருந்தது.

இதில் பிராணபத்து நேரிடுவது சகஜம். ஆதலால் தன் தாயாரை அனாதையாக விட்டுவிட வேண்டுமே யென்று தேவராஜு மனதில் மிக்க வியாகூலமுற்றான். கடைசியில் தன் தாயாருக்கு ஒரு கடிதமும், ஞானம்பாளுக்கு ஒரு கடிதமும் எழுதினன். தன் தாயாருக்கு எழுதிய கடிதத்தில் "நான் தங்களுக்கு இதைப்பற்றிக் கூறாதிருந்தது தப்பிதமே; ஆனல் நான் கூறிவிட் டிருந்தால் தாங்கள் புத்திரவாஞ்சையால் அதைத்தடுக்க முயல்வீர்கள். அதனல் யாவரும், நான் கோழையென்று தீர்மானித்து விடுவார்கள்." என்று நடந்த சங்கதி யாவும் உண்மைப்படி எழுதினன்.

ஞானம்பாளுக்கு ஒருகடிதம் எழுதினன். அதில் நடந்த சங்கதிகளை யெழுதியதோடு தான் அவள்மேல் கொண்டிருக்கும் காதலை மிக்க பொறுமையோடு வெளியிட்டான். இந்த இரண்டு கடிதங்களையும் எழுதியானபின் அவற்றைப் பத்திரமாக வைத்துக்கொண்டு சயனித்துக் கொண்டான். சயனித்துக் கொண்டான் என்றால் நிம்மதியாகத் தூங்கினனென்று கருதலாகாது.

தேவராஜு காலை ஐந்துமணிக்கு எழுந்து உடுத்திக் கொண்டான். அவன் சயனித்துக்கொண் டிருக்கும் அறைக்கு எதிரில்தான் அவன்தாயார் சயனிக்கும் அறையிருக்கிறது. தாயாரை நினைத்தபோதே அவன்மனம் மிக்க தியக்கமுற்றது. ஏனெனில் நேரிடும் யுத்தத்தில் அவன் தன் பிராணனை யிழக்க நேர்ந்தாலும் நேரிடலாகும். தன் தாய்க்கு இச்சங்கதி தெரிந்தால் எப்படியாவது

அதைத் தடைசெய்வாள். ஆதலால் சந்தடிகேட்காதிருப்பதற்காகப் பாதரட்சையைக் கழற்றிக் கையிலெடுத்துக் கொண்டு மெதுவாய் வீட்டிலிருந்து வெளிப்பட்டான். அவன் சண்டை நடக்கவேண்டிய இடத்திற்கு யாவர்க்கும் முன்னுடியே போய்ச் சேர்ந்தான். சற்றுநேரத்திற்குள் தேவராஜின் நண்பனுகிய சோமநாதன் வந்தான்.

இப்போது இவனை யங்கு விட்டுவிட்டு இவன் தாயாரைக் கவனிப்போம். தாயார் எப்போதும் அதிகாலையில் எழுந்திருப்பது வழக்கம். எழுந்ததும் தன் புத்திரனேடு தேகசுத்தி செய்துகொண்டு சிற்றுண்டி கொஞ்சம் அருந்திப் பிறகு உலவச்செல்வது வழக்கம். அதுபோல் அன்றும் ஆறுமணிக்குத் துயிலெழுந்தாள். உடனே தன் மைந்தனைப் பார்த்தாள். இல்லை. வேலைக்காரி மூலமாக அவன் முன்பேயெழுந்து வெளியிற் சென்றுன் என்பதையறிந்து திடுக்கிட்டாள். அப்போது அவள் மனதில் சந்தேகம் உதித்தது. முன்தினம் காப்டென் பிச்சையன் வந்திருந்ததைப்பற்றியும், அதுமுதல் தேவராஜின் முகத்தில் ஒருவித விகாரமுண்டா யிருந்ததைப் பற்றியும் சிந்தித்தபோது அவளுக்கு மிக்க கலவர முண்டாயிற்று. அவன் என்றும் இன்றுபோல் அதிகாலையில் எழுந்து வெளியிற் சென்றதில்லை. மூடுபனியில் தூரத்தில் தெரியும் மங்கலான தீபவொளிபோல் அவள் உடனே யுடுத்திக்கொண்டு வாயிற்படி யருகில் வந்து நின்று சொல்லொணு மனே வேதனையோடும் மிக்க ஆவலோடும் தன் புத்திரன் வரவிற்கு எதிர் பார்த்துக்கொண் டிருந்தாள்.

சுமார் ஏழுமணிக்குத் தேவராஜு வீட்டை நோக்கி வருவதைக் கண்டாள். தன்தாயார் வாயிற்படியில் காத்திருப்பதை யவன் அறியான் ஆகையால் அவன் மனக்குழப்பத்தையும் விகாரமான முகமாறுதலையும் அவன்

இன்னும் மறைக்கவில்லை. அவன் முகவிகாரத்தைக் கண்டதே தாயார் அலறிக்கொண்டு போய் "ஆ! மகனே!" என்று ஆலிங்கனம் செய்து கொண்டாள். அச்சமயம் அவனை ஏதாவதுகேள்விகேட்க அவளுக்குவாய்வரவில்லை.

தேவராஜன் மிக்க கஷ்டப்பட்டுத் தன் கலவரத்தை மறைத்துக்கொண்டு, "அம்மா! நீ ஏன் இப்படிக் கலக்கப்படுகிறாய். நான் சற்று முன்னாடி எழுந்துகொண்டதற்காகவா? காலைக்காற்று மிக்க இரமணீகரமாக விருந்ததால் உலவிவரலா மென்று கருதிச் சென்றேன். சற்று நேரமாகிவிட்டது" என்றான்.

இருவரும் அறையில் வந்து உட்கார்ந்ததும் தாயார் "தேவராஜா! இவ்வாறு மறைத்துப் பேசுவதை விட்டுவிடு; உண்மையில் நீ எங்கே போயிருந்தாய் கூறு" என்றாள்.

தேவராஜன்:—நான் உலவவே சென்றிருந்தேன்.

தாயார்:—"தேவராஜா! என் அருமை மைந்தனே! மிக்க சமீப காலம்வரையில் நீ என்னிடம் மறைத்து வைத்தசங்கதி ஒன்றுகூடக் கிடையாது. இப்போது நீ இத்தகைய மாறுத லடைந்துவிட்டது எனக்கு மிக்க வியப்பாக விருக்கிறது - இன்னும் எனக்குப் பைத்தியம் பிடிக்கும்படி செய்யாதே" என்றாள்.

தேவராஜன்: — அன்னையே நீ இவ்வாறு உன்மனதிற்கு மிக்க கலக்கத்தையும் திகிலையும் உண்டாக்கிக் கொள்ளாதே.

தாயார்:—அவ்வளவும் நீயே யுண்டாக்குகிறாய். ஆ! என் மனம் பட்டவேதனை கடவுளுக்கே தெரியும்.

தேவராஜன்:—"ஓ என் அன்பார்ந்த தாயே! என் பொருட்டாக அத்தகைய மனோ வேதனையை யனுபவித்தாயோ? இத்தனையும் நான் சற்றுநேரம்

வீட்டிலில்லாமற் போனதற்காகவா?'' என்று துயரத்தோடு கூறினன்.

தாயார்:—"இல்லை யில்லை. நீ வெளியில் சென்றிருந்ததற்கல்ல. நேற்றே யுன் மனதில் மிக்க கலக்கமுண்டாயிருந்தது. உன் முகக் குறிப்பில் பயங்கரமான விகாரம் தோன்றியிருந்தது. அந்தக் காப்டென் பிச்சையன் ஏன் உன்னிடம் வந்தான்! நீ என்னத்திற்காக அதிகாலையில் எழுந்து சென்றாய்? ஓ கடவுளே! என் மனதில் உண்டாகும் சந்தேகத்தை நினைக்கும்போது என் உள்ளம் நடுங்குகிறது. தேவராஜா நீ...நீ...நீ சென்றிருந்தது யாரோடேயோ...ஆம்...ஆம்...கடவுளே! யாரோடேயோ சண்டை செய்ய'' என்றாள்.

இவ்வாறு தன் தாய் குறி சொல்லியதுபோல் உண்மையைக் கூறக்கேட்டதே, தேவராஜா வீறிட்டலறி ஆ! என்று இரண்டடி பின்னிடைந்தான். அதைக் கண்டதே அவன் தாய் உண்மையை யறிந்து கொண்டு,

"ஆ! எனக்குத் தெரியும், அய்யோ கடவுளே! நான் இதுகாறும் அனுதரவான நிலைமையை யடைந்துவிட்டிருப்பேனே. ஆ மகனே. ஓ! இதென்ன உன் உட்சட்டையில் கைக்குட்டையில் இரத்தத் துளிகள்!'' என்று அலறினள்.

தேவராஜா "அம்மா தாங்கள் கலக்கப்படவேண்டாம். இது என் இரத்தமல்ல எனக்கு எள்ளளவு காயங்கூடப் படவில்லை. என் எதிரி கொல்லப்படவுமில்லை. சொற்பகாயமே யடைந்தான்'' என்றான்.

தாயார்:—ஆயினும் இதனல் கிடைக்கக்கூடிய தண்டனை?

தேவராஜா:—இல்லை யில்லை. இச்சங்கதி வெளி வரவே வராது. ஆரம்பத்திலேயே அத்தகைய ஏற்பாடு

செய்யப்பட்டிருக்கிறது. நான் காரணமின்றி அத் தகைய விஷயத்தில் பிரவேசியேன்.

தாயார்:—மிக்க கோப மூட்டப்பட்டாலன்றி நீ இதில் பிர வேசித்திருக்கமாட்டாய் என்றே நம்புகிறேன்.

தேவராஜ—ப:—"அம்மா நடந்த சங்கதியைக் கூறுகிறேன் கேள். நான் என் தொழிலிலிருந்து வந்துகொண்டே யிருக்கையில் குற்றமற்ற ஒரு கன்னிகையை ஒரு வாலிபன் மிக்க அக்கிரமமாக மானபங்கம் செய் வதைக் கண்டால் எப்படி நான் சும்மா விருக்க லாகும். நான் உடனே யவனைப் பூமியில் வீழ்த்தி னேன். அம்மா! உன்புத்திரிக்கு அத்தகைய அவ மானத்தை யொருவன் செய்யும்போது இன்னொரு வன் அவளைக் காப்பாற்றினால், நீ அப்படிக் காப் பாற்றியவன் விஷயத்தில் எவ்வளவு நன்றி பாராட்டு வாய். அவன்மேல் எவ்வளவு சந்தோஷப்படு வாய்? அதே விஷயத்தை நான் செய்தேனே யன்றி வேறொன்றுமில்லை. ஏனம்மா! இப்போது நான் செய்தது குற்றமென்று நீ கருதுகிறாயா?" என்றான்.

தாயார்:—"நீ கூறிய நியாயங்களால் நான் எப்படி யுன் மேல் குற்றங் கூறுவது? ஆனால் அத்தகைய துஷ்ட காரியத்தைச் செய்து, உன்னால் வீழ்த்தப் பட்ட வாலிபன் யார்?" என்று கேட்டாள்.

தேவராஜ—ப:—அந்த ஆள் உனக்குத் தெரிந்தவனே. நான் வேணுமென்று அவனுக்குக் கெடுதி செய்யவே மாட்டேன். ஏனெனில் அப்படிச் செய்தால் அது செய்ந் நன்றி கொன்றதாகும். அவன் தந்தையே எனக்கு வேலைக்குச் சிபாரிசு செய்தவர்." என்றான்.

அதைக்கேட்டதே யவன் தாயார் முகத்தில் மிக்க துயரமான ஒரு மாறுதல் உண்டாகியது. அவள் ஆத்

திரத்தோடு "அடடா! துர் அதிஷ்டக்காரனே! என்ன காரியம் செய்தாய்!" என்றாள்.

தேவராஜு:—"அம்மா! என்னைத் தூஷித்தால் வீணாக என் மனதிற்கு மிக்க வியாகூலமுண்டாகும். நான் சண்டையில் அவனைக் கொன்றுவிட்டாலும் அது என் குற்றமாகாது. நான் வேணுமென்று ஒன்றும் செய்யவில்லை" என்றான்.

தாயார் மிக்க மனப்பதைப்போடு "அட கடவுளே! உன் சட்டையில் பட்டிருக்கும் இந்த இரத்தம்! அவனுடைய——அதிலும் அவனுடை இரத்தமென்றால்— அய்யோ! அய்யோ!" என்று தன் கரங்களை நெறித்துக் கொண்டாள். அவ்வாறு கூறிக்கொண்டே நாற்காலியில் சாய்ந்துவிட்டாள்.

தேவராஜு அதைக்கண்டதும், "ஓகோ! இதில் ஏதோ பெரிய இரகசியமான மர்மம் இருக்கிறது." என்று அவன் மனதிற்பட்டது. அவன் தன் தாயாரை நோக்கி "அம்மா நீ கூறுவதைப் பார்த்தால் நான் ஏதோ பெரிய குற்றம் செய்துவிட்டதாக விருக்கிறது. நான் செய்தது பெரிய குற்றமாயினும் நன்றி மறந்தேன் என்ற குற்றமாகுமேயன்றி யதற்குமேலில்லை. ஆனால் நான் அக்குற்றத்தைச் செய்யவில்லை." என்றான்.

தாயார்:—நான் கருதுவதும் அதற்காகத்தான். நீ வேணுமென்று செய்யமாட்டாயென்று நானறிவேன். ஆயினும் அச்சுதன் இதைப்போய்த் தன் தந்தையிடம் கூறமாட்டானே?

தேவராஜு:—ஒருகாலும் கூறமாட்டான். அப்படிக் கூறினால் அது அவனுக்கே அகௌரவமாக முடியும்.

———

11-வது அத்தியாயம்.

புதிய லாயரின் சாமார்த்தியம்.

முன் அத்தியாயத்தின் இறுதியில் கூறிய சங்கதிகள் நடந்த அதே தினம் மாலை சுமார் இரண்டரை மணிக்குச் சுகவிலாசத்தில் செல்வாம்பாள் மிக்க அழகும் வசிகரமுமான உடை யணிந்துகொண்டு தனியே தன் அறையில் உட்கார்ந்திருந்தாள். ஞானம்பாள் தன் பாட்டனிடம் இலிகிதனுக விருந்த தம்புசாமிப்பிள்ளையின் வீட்டிற்குச் சென்றிருந்தாள்.

அச்சமயம் இரண்டு மூன்று வாலிபர்கள் ஒருவர் பின் ஒருவராய் வந்து செல்வாம்பாளிடம் சம்பாஷித்துக் கொண்டிருக்கிறார்கள். இவள் இத்தகைய சகவாசத்தில் மிக்க பிரியமுடையவள் என்று முன்னமே கூறினோம். அந்த வாலிபர் மூவரும் செல்வவந்தர் புத்திரர்கள். தங்கள் காலத்தைக் கேளிக்கையாகவே கழித்துக்கொண்டு முன்னோர் சம்பாதித்த ஆஸ்தியை இலட்சியமின்றிச் செலவு செய்பவர்கள். இதற்குமேல் இவர்கள் நடக்கையைப்பற்றி நாம் வேறு கூறவேண்டுவதில்லை.

இவ்வாலிபர்களின் சம்பாஷணையால் தேவராசும் அச்சுதனும் சண்டையிட்ட சங்கதி செல்வாம்பாள் செவிக்கு எட்டியது. அவ்வாலிபர்கள் சென்றதும் ஞானம்பாள் வந்தபோது, தான் கேள்விப்பட்ட சங்கதியைக் கூறினாள். அவர்கள் சண்டை நடந்ததைப் பற்றிக் கூறியதோடு, இதற்கு மூலகாரணம் ஸ்திரீயாக இருக்கவேண்டும் என்று மட்டும் கூறினார்களேயன்றி மற்ற விவரம் அவர்களுக்கு எட்டவில்லை. ஆனால் செல்வாம்பாளிடம் ஞானம்பாள் நடந்த சங்கதியைக்கூறி

யிருப்பதால் அவள் காரணம் யாவும் அறிந்து கொண் டாள்.

அச்சங்கதியைக் கேட்ட ஞானம்பாள் தன் பொருட் டாக இருவர் பிராணுபத்தில் சிக்கியதைப்பற்றி மிக்க வியாகூலமடைந்தாள். ஆனல் தேவராஜைப்பற்றி மட்டும் அவளுக்கு அன்பும் கௌரவமும் அதிகமாகத் தோன்றி யது. முன்னமே அவன் நடக்கை நேர்மையானதென்று அவளுக்குத் திருப்தியுண்டாகி யிருந்தது. பிறகு அவன் தன்னை மானபங்கத்திலிருந்து காப்பாற்றினன். இப் போது தனக்காக அவன் உயிரையே யிழக்க விருந்தான். அத்தகைய அழகு வாலிபன் மேல் எந்தக்கன்னிகைக்குத் தான் பிரியமும் காதலும் உண்டாகாது?

சற்று நேரங்கழித்து தேவராஜு அங்கு வந்தபோது ஞானம்பாள் அவனிடம் அன்போடும் இரக்கத்தோடும் பேசினள். தேவராஜு தன் காதலை வெளியிட எவ்வளவு ஆவலுடையவனுக விருந்தாலும் இது சமயமல்லவென்று பொறுமையாக விருந்தான். அவன் தனக்காக அத்தகைய பிராணுபத்திற்குள் சிக்கியதைப்பற்றி ஞானம்பாள் வருத்தமடைந்ததாகக் கூறியபோது, அவன் "உனக்கு உதவிசெய்வதில் எனக்கு எத்தகைய ஆபத்து நேர் வதாயினும் அவசியமில்லை" என்று மட்டும் கூறினன். அங்கிருந்து அவன் பிரிந்து போகும்போது அவ னுக்கு ஞானம்பாள்மே லிருந்த காதல் இன்னும் அதிக மாயிற்று.

* * * * * *
* * * * *

மச்சநாதனுடைய மாமனும் ஞானம்பாள் செல் வாம்பாளின் தாய்வழிப் பாட்டனுமாகிய லாயர் வேலாயுதம் பிள்ளையிடம் பிரதம இலிகிதனுகவிருந்த

தம்புசாமிப் பிள்ளையை நண்பர்கள் மறந்திருக்கமாட்டார் கள். அவன் முன்பு லாயராகவே யிருந்தவன் என்று கூறியிருக்கிறோம். வேலாயுதம் பிள்ளை தற்கொலை புரிந்து கொண்டபோது இவன் எல்லா விஷயங்களிலும் அவருக்கு உள்கையாகவே யிருந்தவனென்று யாவருமறிவார்கள். செல்வாம்பாளின் பெற்றோருக்கு இவன் மேல் பூரண சந்தேகமுண்டு. அதனால் தான் இவன் அச்சகோதரிகளுக் குப் பாதுகாவலாக நியமிக்கப்படவில்லை.

வேலாயுதம் பிள்ளை மிக்க தந்திரசாலி. மேலுக்கு ஒன்றும் தெரியாதவன் போல் அபிநயித்தாலும் கள்ளத் தனமாக யாவும் அறிந்து கொள்வதிலும், தந்திரம், சூது, கபடம், கெஞ்சுதல், அபிநயம் செய்தல், யாவற்றிலும் மிக்க சாமார்த்திய முடையவன். தன் எஜமானாகிய வேலாயுதம் பிள்ளையின் இரகசியங்கள் யாவும் அவன் அறிவான். இதனால் அவன் தந்திர சாமார்த்தியத்தோடு தன் எஜமானுடைய கட்சிக்காரர்களில் செல்வவந்தர்களை யும், அனுகூலமானவர்களையும் விடாமற் பற்றிக்கொண் டான். எப்படியோ கொஞ்சம் பணச்செலவு செய்து இழந்துவிட்ட தன் லாயர்சன்னதைப் பெற்றுக்கொண்டு தானே லாயராய் விட்டான்.

இதுகாறும் "வேலாயுதம் பிள்ளை - லாயர்" என்று போட்டிருந்த பலகையில் இப்போது, "தம்புசாமி பிள்ளை- லாயர்" என்று எழுதப்பட்டிருக்கிறது. இரண்டு மூன்று வருடங்களில் நல்ல தேர்ச்சியுடையவ னாய்விட்டான். மிக்க கௌரவம் பொருந்திய பெரிய லாயர் போல் நடையுடைபாவனை யாவற்றிலும் நடிக்கத் தொடங்கினான்.

செல்வாம்பாளின் தாயார் தன்னைத் தன் புத்திரிக் கும் தங்கை புத்திரிக்கும் பாதுகாவலனாக நியமிக்கா விடினும், தான் அவர்கள் மேல் மிக்க இரக்கமும் அன்பு

முடையவன் போல் நடித்தான். அவர்களைத் தன் வீட்டி லேயே வந்திருக்கும்படி வேண்டினான். செல்வாம்பா ளுக்கு அவன் குடும்பத்தின் மேலேயே பூரண வெறுப்பு. ஞானம்பாளோ, துரிதமாக ஒருவர்மேல் கெட்ட அபிப் பிராயம் கொள்ள அஞ்சுபவள்.

தம்புசாமி செல்வந்தனைத் தான் நல்ல நிலைமையி லிருக்கிறவனாகக் கருதப்பட்டபோது தனக்கு ஒரு தனி வீடு ஏற்பாடு செய்துகொண்டான். அடிக்கடி விருந்து களும் கேளிக்கைகளும் வைக்கத் தொடங்கினான். தம்பு சாமி அவைகளுக்கெல்லாம் இச்சகோதரிகளைத் தவறாமல் அழைப்பது வழக்கம். அவன் மனைவி நல்ல மரியாதை யான வமிசத்தில் பிறந்தவள். யாவரிடமும் மரியாதை யோடும் அன்போடும் நடந்துகொள்கிறவள். நாணயமும் நாகரீகமுமுடையவள்.

தம்புசாமிப் பிள்ளை முன் இருந்த கெஞ்சும் குணம், முகஸ்திதிசெய்யும் குணம் முதலியவை யாவும் விட்டு விட்டு மிக்க கௌரவமும் கம்பீரமு முடையவன் போல், நல்ல உயர்தர உடைகளும், பொன் கடிகாரமும் பொற் சங்கிலியு மணிந்துகொண்டு, அனேக வேலைக்காரர்க ளோடும், ஒரு குதிரை வண்டி யோடும், இன்னும் நல்ல க்ஷேம நிலைமையிலிருக்கும் ஒரு லாயர் எவ்வாறு பெருமை யோடு வாழ்வானோ அவ்வாறே வாழ்ந்துகொண் டிருக் கிறான். சீவகாருண்ணிய முடையவன்போல் தானதருமம் செய்வது, வாரந்தோறும் தவறாமல் கோயிலுக்குச் செல் வது, இந்த நடிப்பில் மிக்க ஜாக்கிரதையாகவே நடந்து வருகிறான். சிலருக்கு மட்டும் இவன் வேடதாரியென்று தெரியும்.

இரண்டு மூன்று வாலிபர்கள் செல்வாம்பாளிடம் வந்து தேவராஜனும் அச்சுதனும் சண்டையிட்டதைப்

பற்றிக் கூறினர்கள் என்றும் அச்சமயம் ஞானம்பாள் தம்புசாமிப் பிள்ளையின் வீட்டிற்குச் சென்றிருந்தாளென்றும் கூறினேமல்லவா? சண்டை சங்கதியைக் கேள்விப்பட்டு வந்து கூறியவன் கனம் கிருஷ்டப்பன் என்பவன். அவன், தன் நண்பன் ஒருவன், அச்சண்டை நடக்கையில் கூட விருந்தவன், அதைப்பற்றித் தனக்குக் கூறியதாகவும், அவன் பெயரை வெளியிடலாகாதென்றும் கூறினன்.

ஞானம்பாள் தம்புசாமி வீட்டிற்குச் சென்ற காரணம், அன்று வெளியூரிலிருந்து புதிதாக வரும் லாயரின் சகோதரன் புதல்வியாகிய நீலாட்சி என்பவளைக் காண்பதற்கே யாகும். செல்வாம்பாள் சண்டை சங்கதியைப்பற்றித் தன் சகோதரியிடம் பேசி முடிந்தபின், "ஆ! ஞானம்பா! நீ சென்ற சங்கதியைப்பற்றிக் கூறமறந்துவிட்டாய்போ லிருக்கிறது. நீலாட்சி என்பவள் வந்தாளா? எப்படிப்பட்டவள்! என்ன குணமுடையவள்? எம்மாதிரி இருக்கிருள் ?" என்ருள்.

ஞானம்பாள் "சகோதரியே! ஏககாலத்தில் எத்தனை கேள்விகள் தான் கேட்பாய் ? நீலாட்சி வந்தாள். நான் அவளுக்கு அறிமுகமாக்கப் பட்டேன். சுமார் அரைமணி நேரம் அவளிடம் பேசினேன். அதற்குள் அவள் நடக்கை முதலியவைகளைப் பற்றி நான் எப்படி யறிந்து கொள்வது ?" என்ருள்.

செல்வா :—அதில்லாவிடினும் அவள் எப்படித்தா னிருக்கிருள் ? உயரமா குட்டையா ? அழகுடையவளா ? எப்படி யுடுக்கிருள்? எப்படிப் பேசுகிருள் இவைகளைக் கூறலாகாதா? நீ யவளைக்கண்டவளாயின் அவள் தன்மை யொருவாறு புலப்பட்டிராதா ? என்ருள்.

ஞானம்பாள்:—"அவள் கொஞ்சம் உயரமுடையவளே. ஆனல் அவள் அழகைக் குறைக்கும் உயரமல்ல. வயது இருபத்திரண்டிருக்கும். இதுகாறும் சர்வ கலாசாலையிலிருக்கும் கம்பனூருக்கருகில் ஒரு இடத்தில் தனியே வசித்துக்கொண் டிருந்தாள் என்று தெரிகிறது. தாய் தந்தையர் இறந்து விட்டார்கள். தாயார் சுமார் மூன்று வருடங்களுக்கு முன்தான் இறந்து போனளாம். அவள் மிக்க அழகுடைய வளல்ல வெனினும் சாதாரணமான அழகுடைய வளே. பிரியமாகப் பேசுகிருள். அவள் மனதில் ஏதோ துயரம் இருப்பதுபோல் எனக்குப் புலப்படு கிறது. ஆனல் விபரம் எதுவும் கூறமுடியாது. இதுகாறும் வெளி நாட்டில் இருக்கவே, இனியாவது நகர வாசத்தின் உல்லாச கேளிக்கைகளை யனுபவிக் கலாமென்று கருதி இங்கேயே யிருக்க வந்து விட்டாள்." என்றுள்.

இது நடந்த மூன்ருவது நாள் மாலை ஐந்து மணி யிருக்கும். அச்சமயம், ஒரு அழகிய கன்னிகை கடை வீதியினின்று புறப்பட்டு வீதிகளின் வழியே சென்று கொண்டிருக்கிருள். அவள் நாணயமான உடை யணிந்து கையில் ஏதோ ஒரு சிறு சிப்பத்தை யெடுத்துக்கொண்டு செல்கிருள். நேயர்களே! இவள்தான் லாயர் தம்புசாமி பிள்ளையின் சகோதரன் புதல்வியாகிய நீலாட்சி என்பாள். இவள் தையல் வேலைக்கு வேண்டிய சில சாமான்களை வாங்கிக்கொண்டு வீட்டிற்குத் திரும்பிச் செல்கிருள்.

வழியில் ஒரு கிழவி இவளைக்கண்டு திடுக்கிட்டு நின்று உற்று நோக்கியபின் இவள் பின்னலேயே சென் ருள். அவள் நமது சின்னம்மாளே. சின்னம்மாள் இப் போது முன்போல் ஏழ்மை நிலைமையிலில்லை. உருவத்

திற்கு மீறிய ஆடம்பரமான உடை யணிந்துகொண்டிருக்கிறுள். நீலாட்சி யவளைத் திரும்பிப் பாராததால் அவள் துரிதமாய் நடந்து நீலாட்சியினருகில் சென்று மெதுவாய் "நீலாட்சி!" என்றுள்.

நீலாட்சி யுடனே திரும்பிப் பார்த்ததும் அவள் மனதில் உண்டான கோபத்திற்கும், வெறுப்பிற்கும், வியப்பிற்கும் அளவேயில்லை. அதற்குள் அக்கிழவி "ஆ நீ நகரத்திற்கு வந்திருக்கிற விஷயம் எனக்குத் தெரியும். அப்படியிருந்தால் நான் உனக்கு உதவி செய்யக்கூடும்" என்றுள்.

நீலாட்சி "ஏ! மாதே! உன் உதவியாவது உன் சகவாசமாவது எனக்கு எள்ளளவுகூட வேண்டியதில்லை." என்றுள்.

சின்னம்மாள் என்ற கிழவி:—"நீ யுன் தீர்மானத்தை மாற்றிவிட்டால் நலம். என் காலத்தை நான் இப்போது எப்படியாயினும் செலவழிக்கலாம். ஏனெனில் நான் இதுகாறும் ஏழ்மையான நிலைமையிலிருந்தேன். கடவுள் தயவால் இப்போது நல்ல நிலைமையிலிருக்கிறேன்." என்றுள்.

நீலாக்ஷி:—"தெய்வத்தைப்பற்றி உன் வாயால் கூறுதே. உனக்கு க்ஷேமம் வந்தது இன்னொருவர்க்கு வந்த கெடுதியால்தான் இருக்கும்." என்றுள்.

கிழவி—"நீலாட்சி! நான் கூறுவதைக்கேள். என் உதவியால் உனக்கு நன்மையுண்டு. நீ இந்த ஊருக்குப் புதிது. இங்கே நீ தனியாகச் சமாளிக்க முடியாது. எனக்கு முன்னமே எல்லா சங்கதியும் தெரிந்திருக்கிற வரையில் நான் உனக்கு உதவியாகவிருந்தே தீருவேன்" என்றுள்.

நீலாக்ஷி.—"நீ வலிய என்னைக் கட்டாயப்படுத்தியா

உன் உதவியை யேற்றுக்கொள்ளச் செய்யப் போகிருய் ? அவ்வளவு தைரியமா உனக்கு ?'' என்ருள்.

கிழவி.—"உனக்கு அத்தகைய துணிகரமிருந்தால் என் என்னைக் கண்டபின் நீ யுடனே காரியுமிழ்ந்து விட்டுப் போய்விடாமல் ஒரு விநாடியேனும் நிற்பாயோ. சிந்தித்துப் பார்'' என்ருள்.

நீலாட்சி சிந்தித்துப் பார்த்தாள். கிழவி கூறியது உண்மையேயென்று அவள் மனதிற்பட்டது. ஏனெனில் தன்னுடைய பூர்வ சரித்திரம் அவளுக்குத் தெரியும். ஆகையால் " ஆம். உன்னைச் சில கேள்விகள் கேட்க வேண்டியிருக்கிறது. ஆனல் இப்போது இங்கே பேச முடியாது. நாளை பகல் பன்னிரண்டு மணிக்கு அதோ தெரிகிறது பார், அந்த வீட்டிற்கு வா. சரியாக அந்த வேளைக்கு வா. நான் வாயிற்படியில் உனக்காகக் காத்துக்கொண்டிருப்பேன்.'' என்ருள்.

கிழவி "ஆகா! அப்படியே வருகிறேன்'' என்று கூறி விட்டுத் திரும்பினுள். செல்லும்போது " ஆ ! எனக்குத் தெரியும். என்னைக் கண்டபிறகு என் உதவியை யேற்றுக்கொள்ளாமலிருக்க ஒருவராலும் முடியாது. என் காலம் அதிஷ்ட வழியில் திரும்பி யிருக்கிறது '' என்று தனக்குத் தானே கூறிக்கொண்டு சென்ருள்.

நீலாட்சி அங்கிருந்து மெதுவாக நடந்து சென்ருள். இக்கிழவியைச் சந்தித்தது அவள் மனத்திற்குச் சற்றும் திருப்தியில்லை. "இந்தச் சனியன் ஏன் நம்மைச் சந்தித்தாள். இவள் ஒருவரைக் கண்டால் விட்டுப் போகிற சனியனல்லவே'' என்று கூறிக்கொண்டே சென்ருள். அவள் முன்னமே இக்கிழவியின் குணத்தை யறிந்திருக்கிருளானதால் அவ்வளவு அச்சப்பட்டாள்.

மறுநாள் வெள்ளிக்கிழமை யானதால் தம்புசாமிப்

பிள்ளையின் மனைவி, வேலைக்காரர் யாவரையு மழைத்துக் கொண்டு கோயிலுக்குச் சென்றாள். நீலாட்சி உடனே, வீட்டில் இருக்கும் இரண்டு வேலைக்காரர்களும் சமையலறையி லிருக்கும்போது, தெருவாயிற்படி யருகில் நின்று கிழவியின் வருகைக்கு எதிர் பார்த்துக்கொண் டிருந்தாள்.

கிழவி சரியாய்ப் பனிரண்டு மணிக்கு வந்தாள். நீலாட்சி யவளை யழைத்துக்கொண்டு லாயரின் இரகசிய அறைக்குச் சென்றாள். சற்று நேரத்திற்கு முன் அந்த அறையின் சாவி கதவிலேயே விடப்பட்டிருந்ததைக் கண்டு கிழவியோடு பேசுவதற்கு இந்த அறை தான் தகுந்ததென்று தீர்மானித்துக் கொண்டாள். அந்த அறையில்தான் தம்புசாமிப்பிள்ளை தன் மதிப்புள்ள பத்திரங்கள் கடிதங்கள் முதலிய யாவற்றையும் வைத்துக் கொண்டிருப்பது.

லாயர் அந்த அறையை ஒருபோதும் திறந்து வைப்பதில்லை. அன்று அறையில் உட்கார்ந்து ஏதோ கடிதங்களைப் பார்த்துக்கொண் டிருந்தவன், உக்கிராண அறையில் ஏதோ சேதமுண்டானதாக வேலைக்காரன் வந்து திடீலென்று கூறியதைக்கேட்டு, சட்டென்று கதவை மூடிவிட்டுச் சாவியைக் கதவிலேயே விட்டு உக்கிராணத்திற்குச் சென்றான். அங்கு அரைமணி நேரம் இருக்க நேர்ந்தது. அதைவிட்டு வெளியில் வந்தபோது அவன் மனைவி ஆயத்தமாக உடுத்திக்கொண்டு கோயிலுக்குப் போக நேரமாய் விட்டதென்று கோபித்துக் கொள்ளவே அப்படியே கோயிலுக்குப் போய்விட்டான். நீலாட்சி தலைவலியென்று சாக்கு கூறி நின்றுவிட்டாள்.

இருவரும் அந்த அறைக்குள் சென்றார்கள். அங்கிருந்த மேஜைமேல் அனேகம் கடிதங்கள் கிடந்தன.

நீலாட்சி சின்னம்மாளை நோக்கி "சரி இனி கூறு. நீ யவனைக் கண்டாயா? அவனைப்பற்றி உனக்கென்ன தெரியும்?" என்றாள்.

கிழவி:—அவன் நகரத்திலிருக்கிறான். அதை யறிந்து தான் நீயும் இங்கு வந்தாய்.

நீலா:—அவன் இங்கென்ன செய்கிறான்? அவன் நடவடிக்கைகள் எப்படி யிருக்கின்றன?

கிழவி:—நான் அவனை இரண்டு மூன்றுமுறை சின்ன தோப்பில் கண்டேன். சின்ன தோப்பு நகரத்தின் தெற்கு ஓரத்திலிருக்கிறது.

நீலா:—நான் சிறுவயதில் இங்கு வசித்திருக்கிறேன். எல்லா விடங்களும் எனக்குத் தெரியும். சின்ன தோப்பில் எனக்கு அறிமுகமானவர்க ளிருக்கிறார்கள். நீ யொருதரம் ஒருவரைக் கண்டால் அவர்கள்மேல் விடாமல் வேவு பார்ப்பதில் மிக்க கெட்டிக்காரி.

கிழவி:—அவன் அங்குள்ள இரண்டு கன்னிகைகளை அறிமுகமாக்கிக்கொண்டு அப்போதைக்கப்போது அவர்களைப்போய்க் காண்கிறான்.

நீலா:—எப்படிப்பட்ட கன்னிகைகள்?

கிழவி:—நல்ல மரியாதை யானவர்கள். நன்னடக்கை யுடையவர்கள். அவர்கள் சின்ன தோப்பிலுள்ள சுகவிலாசம் என்ற வீட்டில் வசிக்கிறார்கள்.

நீலா:—(உடனே திடுக்கிட்டு) "யார்? ஞானம்பாள் செல்வாம்பாளா?" என்றாள்.

கிழவி:—ஆம். அவர்கள் உனக்குத் தெரியுமோ?

நீலா:—அவர்கள் இந்த வீட்டிற்கு வந்துகொண் டிருப்பவர்கள். இப்போது நான் கூறியது அவர்களையே. ஞானம்பாள் இரண்டு மூன்று நாட்களுக்கு முன்

என்னை வந்து கண்டாள். அவள் சகோதரி நேற்று வந்தாள். நான் பதிலுக்கு அவர்களைப் போய்க் காண நினைத்திருக்கிறேன். ஆனால் இப்போது நீ கூறிய விஷயங்களால்...'' என்றதும் மனக் கலக்கத் தோடு திகைத்தாள்.

கிழவி:—ஆம். அவன் அங்கு வரும் வழக்கமுடைய வனாக விருப்பதால் உன் விவகாரம் கஷ்டமாய்விட் டது. இதனால் புத்தி சூக்குமமும் சாமார்த்தியமு முடைய ஒரு ஆள் உனக்கு உதவி வேண்டியதே.

நீலா:—அங்கு செல்வதில் அவன் கருத்தென்னவாக விருக்குமென்று நினைக்கிறாய். அக்கன்னிகைகள் யோக்கியமும் மரியாதையுமுடையவர்கள். ஆகை யால் இவன் அங்கு கெட்ட எண்ணங்கொண் டிருக்க முடியாது.

கிழவி:—“அப்படியாயின் இருவரில் ஒருவரை மணம் புரிந்துகொள்ளப் போகிறான்'' என்று கூறிவிட்டுக் கன்னிகையின் முகத்தை யுற்று நோக்கினாள்.

இதைக் கேட்டதே நீலாட்சியின் முகம் வெளுத்து விட்டது. அவள் மனம் பதைத்தது. சற்றுநேரம்மிக்க கஷ்டத்தோடு தன் கோபத்தை யடக்கிக்கொண் டிருந்த தால் அவள் முகம் இரத்தம்போல் சிவந்துவிட்டது. கடைசியில் “இன்னொருத்தியை மணம்புரியக்கூட அவ னுக்குத் துணிகரமிருக்கிறதா?'' என்றாள்.

கிழவி:—“ஆம் உண்மையே. அம்மாதிரி வதந்தி யுண்டா யிருப்பதை நான் கேள்விப்பட்டேன்'' என்று துணிவோடு கூறினாள்.

நீலாட்சி தன் கண்களில் கோபத்தணல் வீசக் கிழவியை நோக்கி “ஏ மாதே! நீ கூறுவது அடியோடு பொய். ஒருகாலும் அப்படியிராது. அவ்வாறு கூறினால்

உன் உதவி அவசியம் வேண்டுமென்று எனக்குத் தோன்றும் என்று கருதியே நீ யப்படிக் கூறினுய்.'' என்ருள்.

அவள் கூறியது உண்மையே. ஆயினும் கிழவி தான் சொன்னதைச் சாதித்தே தீரவேண்டுமென்றெண்ணி "நான் என்னவோ அவ்வதந்தியைக் காதால் கேட்டேன். அவ்வளவே. வேண்டுமாயின் நீபோய் அப்பிரதேசங்களில் விசாரித்துப்பார்'' என்ருள்.

நீலாட்சி மறுபடி மிக்க மனக்கலக்க மடைந்தாள். தன்னை மோசம்செய்த அத்துஷ்டன்மேல் அவளுக்கு இப்போது அன்பில்லை யெனினும், இன்னொருத்தியை மணம்புரியக் கருதுகிருன் என்றதைக் கேட்டதே இயற்கையாயுள்ள பொருமைக் குணம் அவள் நெஞ்சைத் தீயிட்டெரித்தது. சகோதரிகள் இருவரும் தன்னைக் காட்டிலும் மிக்க அழகுடையோரென்று அவள் அறிவாளாதலால் அவன் அப்படிக்கருதி யிருப்பானென்று ஐயமுற்ருள். அதன் மேல் கிழவியை நோக்கி,

"இருக்கட்டும். அந்த வதந்தியைக் கேட்ட நீ அவர்கள் இருவரில் யாரை யவன் மணம்புரியக் கருதுகிருன் என்பதைப் பற்றிக் கேள்விப்பட்டாயா?'' என்ருள்.

கிழவி முதலில் துணிகரமாக இருவரில் ஒருத்தி பெயரைக் கூறிவிடலா மென்று கருதினுள். ஆனுல் உடனே "சே! அளவு மீறி விட்டால் காரியமேகெட்டுப் போம். மேலும் விவகாரம் எவ்வளவு மர்மத்தில் இருக்கிறதோ அவ்வளவும் நமக்கு நல்லதே. விவரமறிய நமது உதவி அவசியமென்று இவளுக்குப் புலப்படும்'' என்று கருதி, "இல்லையில்லை. அந்த விவரம் இன்னும் தெரியாது. நீ யவர்களைப் பார்த்தவரையில் அவர்கள் உன்னிலும்

அழகுடையவர்களென்று அறிந்துகொண் டிருப்பாய்'' என்றாள்.

நீலா:—"ஆம் ஆம். அழகில் நான் அவர்களுக்கிணையல்ல'' என்று மனச்சோர்வோடு கூறினாள்.

கிழவி:—அம்மா! நீ அவதைரியப் படவேண்டாம். தைரியத்தோடிரு'' என்றதும், நீலாட்சியின் முகத்தி லுண்டான ஒருவித வெறுப்பும் கோபமுமாகிய குறியைக் கண்டு தட்டென்று வாயைமூடிக் கொண் டாள்.

நீலா:—"போதும் போதும். எனக்குத் தைரியக்குறைவு நேர்ந்தால், உன்போன்றவர்கள் வாக்கிலிருந்தல்ல எனக்குத் தைரியம் உண்டாக வேண்டியது'' என்றாள்.

கிழவி:—அம்மா நான் உனக்குக்கோபமூட்ட வெண்ணி யிப்படிக் கூறவில்லை. அவன் செய்யும் முயற்சி களனைத்தும் பயன் பெறுவண்ணம் நான் செய்து விடுகிறேன் என்பதே என் கருத்து.

நீலா:—"ஏ கிழவி! நான் கூறுவதைக் கவனமாகக் கேட் டுக்கொள். எனக்கு உன் உதவியாவது உன் நட்பா வது எள்ளளவும் வேண்டியதில்லை. அந்தச் சண் டாளன் மேல் எனக்கிருந்த காதலாவது அன்பாவது இப்போது எள்ளளவு கூட இல்லை. என் கண்களி லிருந்து பெருகிய உஷ்ணம் பொருந்திய ஊற்று வெள்ளத்தால் அவன்மே லிருந்த அன்பு கிஞ்சித்து கூட இல்லாமல் அடியோடு கழுவப்பட்டுப்போயிற்று என்பது உண்மை. இப்போதிருப்பது பூரண வெறுப்பே. ஆயினும் அவன் சங்கதிகளைப் பற்றி யறியவிரும்பி யுன்னைக்கேட்டேன். நேற்று நாம் சந்தித்த விடம் வீதியாதலால் அது பேசுவது

ஒழுங்கல்லவென்று உன்னை யிங்கு வரும்படி கூறினேன். நீ அவ்வாறே வந்தாய். நான் கேட்டவற்றைக் கூறினாய். ஆகையால் உனக்களிக்கும் பரிசை வாங்கிக்கொள்'' என்று கூறிக்கொண்டே சேபியில் கையிட்டாள். பணப்பை யதிலில்லை. இரு வருகிறேன் என்று கிழவியை யங்கேயே யிருக்கச் சொல்லிவிட்டுக் கதவை மூடிக்கொண்டு மேல்மாடியி லிருக்கும் தன் அறைக்குச் சென்றாள்.

12-வது அத்தியாயம்.

மர்மமான விஷயங்கள்.

நீலாட்சி தன் பணப்பையை யெடுத்துக் கொண்டு திரும்பி வரும்போது படிக்கட்டுகளை வேலைக்காரி சுத்திசெய்துகொண் டிருப்பதைக் கண்டு மேலேயே நின்றாள். ஏனெனில் வேலைக்காரி இருக்குமிடத்திலிருந்து பார்த்தால் லாயரின் இரகசிய அறை நன்றாய்த் தெரிகிறது. ஆகையால் தான் அதற்குள் சென்றால் அவள் பார்த்து விடுவாள்.

நீலாட்சி பத்து நிமிடங்கள் காத்திருந்தும் வேலைக்காரி செல்லாமல் படிக்கட்டுகளை யெல்லாம் சுத்தி செய்து விட்டு சுருட்டிய ஜமக்காளத்தை மறுபடி யவற்றின் மேல் விரித்துவிட்டு, பிறகு, அருகிலிருந்த தாழ்வாரத்தையும் சுத்திசெய்யத் தொடங்கினாள். நீலாம்பாளுக்கு அதிக கலக்கமுண்டாயிற்று.

வேலைக்காரி தன் பெரிய தந்தையின் அறை பூட்டப் படாமலிருப்பதைக் கண்டு பூட்டிச் சாவியை யெடுத்துக் கொண்டு போய்விட்டால் என்ன செய்வது? அல்லது அதையும் சுத்திசெய்ய உள்ளே சென்று அங்கிருக்கும்

சின்னம்மாளைப் பார்த்துவிட்டால் என்ன செய்வது? அதோடு கோயிலுக்குச் சென்றவர்கள் திரும்பிவரவேண்டிய வேளையும் நெருங்கிவிட்டது. ஆனால் இருபது நிமிடங்கள் கழித்து வேலைக்காரி அந்த அறையைக் கவனிக்காமலே போய்விட்டாள்.

நீலாட்சி துரிதமாய் அந்த அறைக்குச் சென்றதும் பையிலிருந்த இருபது பவுனையும் கிழவியினிடமளித்து, "இந்தா இதை யெடுத்துக்கொள். நீ செய்த சொற்ப உதவிக்கல்ல இவ்வளவு கொடுத்தது. கடைசியாக நான் பிரிந்து விடுவதற்காக உனக்குப் பரிசாக இதை யளிக்கிறேன். இனி உன் சகவாசமே எனக்கு வேண்டாம்." என்றாள்.

கிழவி ஆவலோடு பணத்தை யெடுத்துக்கொண்டு, "அப்படியாயின் இனி யுன் காரியங்களை நீயே நடத்திக் கொள்ளத் தீர்மானித்திருக்கிறாயோ?" என்றாள். நீலாட்சி ஆம் அப்படித்தான் என்றாள். கிழவி "நான் பலவந்தமாக உனக்கு உதவியாக இருந்தே தீருவேன் என்றாலோ?" என்றாள். நீலாட்சி. "எதோ அப்படிக் கூறிப்பார். நீ மரியாதையாகக் கேட்டபோது நான் சாந்தமாகக் கூறியதுபோலவே, இப்படி கேட்டால் கண்டிப்பாய் உன்னை யென் அருகில் வரும்படி கூட விடமாட்டேனென்று நினை, பத்திரம்" என்றாள்.

கிழவி :—"என்னைப் பயமுறுத்துகிறாயோ?" என்றாள்.

நீலா :—இப்போது உன் பயமுறுத்தலுக்கு நான் எள்ளளவும் பயப்படவேண்டிய அவசியமே யில்லை. அப்படியே என் பயமுறுத்தலுக்கு நீயும் பயப்பட வேண்டிய காரணமில்லை.

கிழவி :—ஆயினும் ஒரு சங்கதியை வெளியிடக்கூடும்.

நீலாட்சி கோபத்தோடும் வெறுப்போடும் "சீ சீ! வெளியிடு. நான் அதற்கெல்லாம் இப்போது எள்ளளவும் அஞ்சுகிறவளல்ல. உன்னாலானதைப்பார்." என்றாள்.

கிழவி "இவளுக்கு இத்தகைய துணிகரம் எப்படி வந்ததென்று தனக்குள் வியப்படைந்து கொண்டே அறையை விட்டு வெளியிற் சென்றாள். நீலாட்சி அவள் வீட்டை விட்டுச் சென்றதை யறிந்தபின் தன் படுக்கை யறைக்குச் சென்று சயனித்துக் கொண்டாள்.

சற்று நேரங்கழிந்து கோயிலுக்குச் சென்றவர்கள் வந்தார்கள். லாயர் தன் அறையைத் தான் திறந்தபடி விட்டுச் சென்றதைக்கண்டு விசாரித்தபோது வேலைக்காரி யதை யுணரவேயில்லை யென்று தெரியவந்தது. பிறகு அவனும் அவன் மனைவியும் நீலாட்சியின் அறைக்குச் சென்று அவளை நோக்கி "உனக்குத் தேகம் எப்படி யிருக்கிறது?" என்று கேட்டார்கள். அவள் "நான் இது காறும் என் படுக்கையைவிட்டு எழுந்திருக்கவேயில்லை. இப்போதுதான் தலைநோய் சற்று சுமாராகவிருக்கிறது" என்றாள்.

இதைக்கேட்ட பின் லாயருக்கு மனம் நிம்மதியாய் விட்டது. "நீ உன் தேகத்தை மிக்க சாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று கூறியதற்கு நீலாட்சி "இல்லை யில்லை. நாளைக்குச் சுகமடைந்து விடுவேன்" என்றாள்.

மறுநாள் காலை பத்துமணிக்கு லாயர் காலைப்போஜனத்தை முடித்துக்கொண்டு தன் அறைக்குள் சென்று கடிதங்களைப் பார்த்துக்கொண் டிருந்தான். கால்மணி நேரத்திற்குள் திரவியநாதம் பிரபு, அதாவது அச்சுதன் தந்தை யங்குவந்தார். அவரைக் கண்டதும் லாயர் எழுந்து குனிந்து மிக்க மரியாதையோடு அவருக்கு

வந்தனம் புரிந்தான். அவர் விஷயங்களே யெல்லாம் கவனிப்பதற்கு வேறு லாயரிருக்கிருர். தம்புசாமி பிள்ளே இரண்டொரு விஷயங்களே மட்டும் பார்த்து வருகிறுன்.

அப்பிரபுவுக்குச் சுமார் ஐம்பது வயதிருக்கும். அவர் ஆசனத்தில் உட்கார்ந்து லாயரையும் உட்காரும் படி செய்தபின் "சங்கதி தெரியுமா? அது மிக்க மன வருத்தமான சங்கதி" என்ருர்.

லாயர்.—அதைக்கேட்க நான் மிக்க விசனப்படுகிறேன். ஆயினும் எனக்கு ஒன்றும் விளங்கவில்லே.

பிரபு:—வதந்தி யொன்றும் நீ கேள்விப்பட வில்லேயா?

லாயர்:—இல்லேயே.

பிரபு:—அப்படியாயின் நான் கூறுகிறேன். என் புத்திரன் அம்முரட்டுப் பயல் இருக்கிருனே. அவன் துப் பாக்கிச்சண்டையி லல்லவோ பிரவேசித்துவிட் டான். அதிலும் அவன் யாருடன் சண்டை செய் தான் தெரியுமா. நீ நம்பமாட்டாய், தேவராஜோடு.

லாயர்:—அய்யோ கடவுளே. இதைப்பற்றி நான் கேள் விப்படவேயில்லே. கனம் அச்சுதன் அவர்களே நான் பார்த்திருக்கிறேனே யொழிய அவரைப்பற்றி எனக்கு ஒன்றுமே தெரியாது. அவர் இத்தகைய விஷயத்தில் பிரவேசித்தாரென்பது எனக்கு மிக்க வியப்பாகவே யிருக்கிறது.

பிரபு:—நான் இதைப்பற்றி இரவுதான் கேள்விப்பட் டேன். அது உண்மையென்றே தெரிகிறது. ஏனெ னில் அச்சுதன் நேற்றிலிருந்து தன் அறையிலேயே படுக்கையிலிருக்கிருன். குதிரைமே லிருந்து வீழ்ந்த தாகவும், கரத்தில் கொஞ்சம் காயம்பட்டதாகவும் கூறப்படுகிறது. வைத்தியர் அனுவசியம், சீக்கிரம்

சுகமாய் விடும் என்று கூறுகிறான். அதன் விவரம் ஒன்றுமே விளங்கவில்லை.

லாயர்:—இதைக் கேட்டபின் தாங்கள் என்ன செய்தீர்கள் ?

பிரபு:—நான் அச்சுதனை யொன்றும் விசாரிக்கவில்லை. ஏனெனில் ஆத்திரத்தில் என் மனதிலிருக்கும் சங்கதி வெளி வந்துவிடும். உனக்கு அது நன்றாய் விளங்கும் என்று கருதுகிறேன்.

லாயர்:—பிரபுவே ! நான் தங்கள் மனோ நிலைமை யாவும் நன்றாய் அறிகிறேன். தாங்கள் அதைப்பற்றி எனக்கொன்றும் கூறவேண்டுவதில்லை. இந்தச் சண்டைக்குக் காரணம் என்னவோ ?

பிரபு:—அதுதான் எனக்கு அடியோடு தெரியாது. நீ யதையே கண்டறியவேண்டும். அதைப்பற்றி யாரைக் கேட்பதென்று உனக்குத் தெரியும். இப்போது நான் கூறுவதைக் கேள். இத்தகைய சண்டை பெரும்பாலும் ஒரு ஸ்திரீயின் காரணத்தாலேயே யுண்டாவது. ஆனால் அவ்வாறு சண்டையிடுவோர் பிறகு அவ்வளவும் சினேகமாகி விடுவது வழக்கம்.

லாயர்:—அப்படி நேரிடும்படி இடந்தரலாகாது.

பிரபு:—அதே நான் கூறுவது. அது என்னால் ஆகாது. உன்னாலேயே அக்காரியம் ஆகவேண்டும். ஆனால் மிக்க இரகசியமாகவும், சாக்கிரதையாகவும் நடத்த வேண்டும்.

லாயர்:—இவ் விஷயத்தை நான் மிக்க ஜாக்கிரதையோடும் நம்பகத்தோடும் நடத்துவேனென்று தாங்கள் பூரணமாக நம்பலாகும். நான் இவ்வளவு காலமாக

இந்த இரகசியத்தைக் காப்பாற்றி வருவதாலேயே தாங்கள் இதை யுணரலாகும்.

பிரபு:—ஆம் ஆம். அதை நான் நன்றியோடு உணர்ந்திருக்கிறேன். நீ இதைப்பற்றிய எல்லா விவரங்களையும் அறிந்துகொண்டு வந்தால் பிறகு நாம் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்பதைப்பற்றி ஆலோசிக்கலாம்.

லாயர் அவ்வாறே செய்வதாய்க் கூறியதும் பிரபு அங்கிருந்து புறப்பட்டார். லாயர் மறுபடி தன் பத்திரங்களைப் பார்க்கத் தொடங்கினன். இரண்டொரு நிமிடங்களுக்குள் ஒரு வேலைக்காரன் வந்து லாயரிடம் ஒரு கடிதத்தை யளித்தான். அதைக்கண்டதே லாயர் இது யாரோ யாசகர் எழுதி யிருக்கவேண்டுமென்று கருதி அதைப் பிரித்துப்பார்த்தான். அது வாசிப்பில்லாத ஆளால் எழுதப்பட்டிருந்தது.

அதை வாசித்துப் பார்த்ததும் லாயரின் முகம் வெளுத்துவிட்டது. அவன் மனம் மிக்க கலக்கமடைந்தது. "அப்பா ஐயாயிரம் பவுன்! என்ன அனியாயம். ஐயாயிரம் பவுன் வீணாய் ஆற்றில் மூட்டை கட்டி யெறிந்துவிட்டது போலவே. இதென்ன இது. இதென்ன நினைக்கத்தக்க காரியமா? அய்யோ கடவுளே!" என்றான். அப்பணத்தை யிழப்பதால் அவனுக்கு நஷ்டம் தோன்றுதெனினும் அதை யிழந்து விடுவது அவனுக்கு மிக்க மனவருத்தமாக விருந்தது. "அந்தோ நாளையனன்றைக்கு ஐயாயிரம் பவுன் அளித்துவிட வேண்டும். ஆயினும் வேறு வழியில்லை. என்ன செய்வது! வழியில் கள்ளர் பறித்துச்சென்றால் என் செய்வோம். அவ்வாறே யிதையும் கருதவேண்டும்" என்று தன் மனதைத் திடப்படுத்திக்கொண்டு வீட்டைவிட்டுப் புறப்பட்டு ஒரு

வண்டியிலேறிக்கொண்டு தேவராஜனும் அவன் தாயும் வசிக்கும் வீட்டிற்குச் சென்றான்.

அவர்கள் வீட்டருகில் வண்டியை நிறுத்தி அதிலிருந் திறங்கி வீட்டின் கதவைத் தட்டியதும் வேலைக்காரி வந்து கதவைத் திறந்தாள். லாயர் உன் எஜமானி வீட்டிலிருக் கிறார்களா என்றதற்கு அவள் இருக்கிறார்கள், என்ன பெயர் கூறுவது என்றாள். லாயர் "பெயரைப்பற்றி அக்கரையில்லை. லாயர் ஒருவர் தங்களைக்காண வந்திருக் கிறார் என்று கூறு" என்றான்.

வேலைக்காரி சென்று கூறுவதற்குள் வண்டி வீட்டரு கில் வந்து நின்றதைக்கண்ட தேவராஜின் தாயார் தான் வெளியில் வந்து லாயரைக் கண்டதும் மரியாதையோடு உள்ளே யழைத்துச் சென்றாள். லாயர், திரவியநாதம் பிரபு தன்னிடம்கூறியசங்கதியை யியம்பி, அதைப்பற்றித் தங்களுக்கு என்ன தெரியும் என்றான்.

அம்மாது "எனக்கு அதிகமாக ஒன்றும் தெரி யாது. யாரோ ஒரு கன்னிகையை அச்சுதன் அகௌரவ மாக நடத்தியதைக் கண்டு தேவராஜன் அவனைப் பூமி யில் வீழ்த்திவிட்டான். இதுவே சண்டைக்குக் காரணம். அக்கன்னிகை யாரென்று நானறியேன்" என்றாள்.

லாயர் "அச்சுதனும் தேவராஜனும் இதற்கு முன்னம் அறிமுக மாகியிருக்கிறார்களோ?" என்றான். தேவராஜின் தாய் "ஆம். இருவருக்கும் அறிமுகமான ஒரு வீட்டில் இவர்கள் ஒருவரை யொருவர் கண்டு பழகி யிருக்கிறார் கள்." என்றாள்.

லாயர்:—"அது யார் வீடு. அங்கே யாரார் வசிப்பது" என்றான்.

அம்மாது:—அவ்வீடு சுகவிலாசம் என்ற பெயரை யுடை

யது. அங்கு மிக்க மரியாதையும் யோக்கியதையு முடைய இரண்டு கன்னிகைகள் வசிக்கிறார்கள்.

லாயர்:—ஆ! அவர்களா? அவர்கள் எனக்கு நன்றாய்த் தெரியுமே. அவர்கள் நமது வீட்டிற்கு வந்துகொண் டிருப்பவர்கள். கனம் அச்சுதனுவது, தேவராஜா வது அங்கு வந்துகொண் டிருப்பதைப்பற்றி அவர் கள் என்னிடம் பிரஸ்தாபிக்கவே யில்லை. ஆனல் இரண்டு மூன்று மாதங்களாக நான் அவர்களிடம் சாவதானமாகப் பேசச் சமயம் வாய்க்காமலே போய்விட்டது. சரி, தாங்கள் இதைப் பற்றிய எல்லா சங்கதிகளையும் பக்குவமாக விசாரித்தறிந்து என்னிடம் தெரிவிக்கவேண்டும். நான் நாளை வரு கிறேன். பிரபு என்னிடம் வந்து மிக்க மனவருத்தத் தோடு கூறினர்.

அம்மாது:—அய்யோ! எனக்கு இச்சங்கதி மட்டும் கொஞ் சம் முன்னடி தெரிந்திருந்தால் எப்படியேனும் இதை நடக்கவொட்டாது தடுத்துவிட் டிருப்பேன்.

லாயர்:—"நான் வேலைக்காரியிடம் என் பெயரைக் கூற வில்லை. ஆகையால் தங்கள் புத்திரனிடம் நான் வந்ததாகக் கூறவே வேண்டாம். சங்கதிகளை மட்டும் கூடிய வரையில் தகவலாக அறிந்து கொள்ளவேண் டும். அந்த இரண்டு கன்னிகைகளில் யார் இதற்குக் காரணம் - யாவும் விபரமாக அறிந்துகொள்ளவேண் டும்" என்று கூறிவிட்டு,

"ஆ! இக் கால் வருடத்திற்கு தங்களுக்குச் சேர வேண்டியதை யின்னும் அளிக்கவில்லை யல்லவா? நான் இங்கு வந்த வரையில் அதை யளித்துவிடுகிறேன்" என்று தன் ஜேபியிலிருந்து ஐம்பது பவுன் நோட் எடுத்து அம் மாதிடம் அளித்துவிட்டு அதற்கு இரசீது பெற்றுக்

கொண்டு அங்கிருந்து புறப்பட்டான். முதலில் நேராகச் சுகவிலாசத்திற்குச் செல்லக் கருதினன். ஒரு சமயம் தன் வண்டி தேவராஜின் வீட்டிற்கு வந்திருந்ததை சகோதரி கள் பார்த்துவிட் டிருந்தால் தான் புது மனைக்கு வந்ததை யவர்கள் அறிந்துகொள்வார்க ளென்று அங்கு செல்லா மல் நகரத்திற்குள் வண்டியை விடும்படி கட்டளையிட்டான்.

13-வது அத்தியாயம்.

சிறைச்சாலையில் வயோதிகர்.

தேவராஜு வீட்டிலிருந்து நகரத்திற்குள் பிரவே சித்த லாயர் தம்புசாமிப்பிள்ளை நேராய்த் தன் வீட்டிற்காவது தொழிற்சாலைக்காவது செல்லாமல் கடன் காரர் வைக்கப்பட் டிருக்கும் சிறைச்சாலைக்குச் சென் ருன். லாயர் அச்சிறைச்சாலைக்கு அடிக்கடி செல்வதுண் டாகையாலும், அவன் க்ஷேமதிசையி லிருக்கும் லாய ரென்று அங்குள்ளோரும் அறிவராதலாலும் அவனை மரி யாதையோடு உள்ளே விட்டார்கள். லாயருக்குத் தான் காணவந்த ஆள் சிறைச்சாலையின் எப்பாகத்தி லிருக்கிரு னென்பதும் தெரியும்.

லாயர் சென்ற அறை விசாலமானது. அதில் இருந்த ஒரு மேஜையைச் சுற்றி பத்து பனிரண்டு பேர் உட்கார் ந்து சுருட்டு பிடித்துக்கொண் டிருந்தார்கள். சிறைச் சாலையில் சுருட்டு பிடிக்க அனுமதி யுண்டோவென்று சிலர் ஐயுறலாகும். அது கடன்பட்டோர் வைக்கப்படும் சிறை. அதோடு தேசங்கள்தோறும் ஆசாரங்கள் மாறு பட்டிருப்பதுபோல் சட்ட திட்டங்களும் மாறுபட்டே யிருக்குமென்பது அனுபவமாகையால் அத்தகைய விஷ யங்களில் சந்தேகங் கொள்ளலாகாது.

லாயர் அந்த அறையின் வாயிற்படியில் நின்று உள்ளே யிருந்தவர்களில் ஒரு வயோதிகனைக் கைகாட்டி யழைத்தான். லாயரைக் கண்டதே அக்கிழவன் மிக்க ஆவலோடும் முகமலர்ச்சியோடும் துரிதமாக எழுந்து வந்தான். இருவரும் அங்குள்ள கிழவன் அறைக்குட் சென்று உட்கார்ந்தார்கள். அக்கிழவனுக்கு வயது எழுபதாகிறது. தேகம் தளர்ந்திருக்கிறது. அவன் இருபது வருடங்களுக் கதிகமாக அச்சிறைச்சாலையில் இருந்து வருகிறான். அது அவனுக்கு வீடுபோலாகி விட்டது. துயரத்தாலும் ஆவலாலும் உண்டாகிய அவன் முகவிகாரம் இயற்கையேபோ லாய்விட்டது. அவன் தேகம் சுகமான நிலையிலேயே யிருக்கிறது. அவன் உடை களும் அங்குள்ள மற்ற சிறையாளிகள் உடைகள் போலிராமல் சற்று நாணயமாகவும் சுத்தமாகவுமே யிருக்கின்றன. அவன் ஒரு காலத்தில் செல்வத்தோடு நகர மாளிகைகளும், நாட்டில் வீடுகள், தோட்டங்கள், வேறு பூஸ்திதிகள், வண்டி, ஆட்கள் இவ்வளவோடும் வாழ்ந்துகொண் டிருந்தவன். திடீலென்று யாவற்றையும் இழந்து இருபது வருடமாக இந்த நிலையிலிருக்கிறான். அவன் பெயர் பராங்குசம் பிள்ளை. அவன் ஆஸ்திமுழுமை யும் துளசிங்கம் பிரபு என்பவரால் அபகரிக்கப்பட்டு அவருக்கும் இவனுக்கும் இருபது வருடகாலமாய் பிரதம நீதிச்சபையில் வியாச்சியம் நடந்து வருகிறது. கிழவனுக்கு லாயர் வேலாயுதம் பிள்ளை, நமது ஞானம்பாள் செல்வாம் பாளின் பாட்டனார் வக்கீலாக அமர்ந்திருந்தார். அவர் காலஞ்சென்ற பிறகு அவர் பதவிக்கு வந்த தம்புசாமிப் பிள்ளை அந்த வேலையை யேற்றுக்கொண்டான்.

சிறையிலிருந்தாலும் கிழவனுக்குச் சாதாரணமாக நல்லஉணவே கிடைத்து வருகிறது. வியாச்சியம் ஆச்சு

இந்த தவணையில் முடிவாய்விடும், அடுத்த தவணையில் முடிவாய் விடும் என்ற நிலைமையி லிருக்கிறது. இவ்வளவு காலமாகியும் கிழவன்மட்டும் மனோதைரியங் குன்றவில்லை. தனக்குச் செயம் கிடைக்குமென்ற நம்பிக்கையே கொண் டிருக்கிறான். கிழவனுடைய பிடிவாதமும் குறையவில்லை.

கிழவன் லாயரை நோக்கி "என்ன சமாசாரம், ஏதாவது விசேஷம் கொண்டுவந்தீர்களா?" என்றான்.

லாயர்:—"இல்லை யில்லை, ஒரு விசேஷமுமில்லை. இந்தத் தவணையில் இவ்வியாஜ்ஜியத்தைப் பற்றி பிரதம நீதிச் சபையில் முடிவான வாதம் நிகழப்போகிறது. அதற்காகச் சில தகவல்கள் வேண்டும். தங்களிடம் அவற்றைக் கேட்டுக் குறித்துக்கொண்டு செல்லவே இப்போது வந்தேன்" என்றான்.

அதன் பிறகு சற்றுநேரம் இருவரும் அவ்வியாச்சிய சம்பந்தமான விஷயங்களைப் பற்றி பேசிக்கொண் டிருந் தார்கள். முடிவில் பராங்குசம் பிள்ளை லாயரைநோக்கி,

"நான் கேட்ட நிபந்தனைகளைப் பிரதிவாதிகளுக்குக் கூறினீர்களா. அதாவது வேம்பூரிலுள்ள நஞ்சை புஞ்சை முழுமையும், வேலம்பட்டியி லுள்ள இரண்டு தோட்டங் களும், பக்கத்திலுள்ள கிராமம், நாட்டு மாளிகைகளில் இரண்டு நகரத்திலுள்ள இரண்டு மாளிகைகளும் தோட் டங்களும், நகரபாங்கியிலுள்ள பணம் முழுமையும் கொடுத்துவிட்டால் சமாதானமாய்விடத் தடையில்லை" என்றார்.

லாயர் சற்று வெறுப்போடு "ஆனால் தாங்கள் ஒரு விஷயம் கவனிக்கவில்லை. அதாவது தாங்கள் கேட்பது தாவாசொத்து மொத்தத்தில் முக்கால் பாகம் என்பதைக் கவனியும்.

கிழவர்:—"ஆகா கவனித்தேன். அதில் ஒரு இம்மிகுறை

வதாயினும் ஒப்பமாட்டேன். என் சொத்து முழு மையும் மிக்க அக்கிரமமாக அந்தத் துளசிங்கம் பிரபு அபகரித்துக் கொண்டிருக்கிறான். நான் கேட்பது நியாயமே. லாயர் வேலாயுதம் பிள்ளையும் அது நியாயந்தான் என்று கூறியிருக்கிறார். நீரும் அப் படித்தான் கருத வேண்டும்.

லாயர் :—"ஆகா அப்படி நினைக்கா விட்டால் நான் இதில் பிரவேசித்திரேன். இதற்காக இவ்வளவு பணச் செலவுக்கும் சிரமத்திற்கும் உட்பட மாட்டேன். ஆயினும் உமக்கு ஒரு வழியாகக் கூற வேண்டியது என் கடமையாக விருக்கிறது. இதோ பாரும் இப்போது இருபது வருடங்களுக் கதிகமாய் விட் டது. உமது சந்ததியார்கள் ஒவ்வொருவராய் மாண்டு குறைந்து கொண்டே போகிறார்கள்" என்றான்.

இதைக் கேட்டதே கிழவர் வியாகூலத்தோடு "அந்தோ உண்மையே! உண்மையே. கடைசியில் உண்ணுமுலையும் கிருஷ்ணராஜனுமே மிச்சமாக விருக் கிறார்கள்" என்றார்.

லாயர் இந்த வழியில்தான் இவன் மனதிளகச்செய்து இவனை வசப்படுத்திக் காரியத்தை நிறைவேற்றிக்கொள்ள வேண்டு மென்று தனக்குள் கருதிக்கொண்டு "பாபம்! இவர்களுக்காவது தாங்கள் இரக்கம் காட்டி ஒரு வழியாக இதை முடிவிற்குக் கொண்டுவரக் கருத வேண்டும்" என்றான்.

கிழவர் :—"ஆம் ஆம். அய்யோ! கிருஷ்டராஜன் தன் சுயகஷ்டத்தால் ஜீவனம் செய்யவேண்டு மென்ற கௌரவ நோக்க முடையவன். அவன் துணிகரமாக ஒரு கப்பலில் மாலுமித்தொழிலுக்குச் செல்வதாகக்

கூறியதைக் கேட்டதே என்மனம் பட்டவேதனை கடவுளே யறிவார். இப்போது என் பேத்தி உண்ணு மூலை, சிறு பெண்ணுக விருந்தும் என்னைப் போஷிக் கவும் தான் ஜீவிக்கவும் இரவும் பகலும் எவ்வளவோ கஷ்டப்பட்டு தையல் வேலை செய்கிருள்........."

என்றதே,

லாயர் "இவற்ருேடு வியாச்சியங்கள் கொஞ்சத்தில் ஒழிகிற விஷயங்களல்ல. இதோ இப்போதே இருபது இருபத்திரண்டு வருடங்க ளாய்விட்டன. மேலும் இக் காலத்தில் நியாயம் அநியாயமாகவும் அநியாயம் நியாய மாகவும் மாறி விடுகின்றன. கடைசியில் தெரிகிற வரையில் எதையும் நம்பிக்கையாகக் கூற முடியவில்லை. சீக்கிரம் கொஞ்சம் சொத்து கிடைத்தாலும் தங்கள் கடைசி கால த்தையேனும் நிம்மதியாகக் கழிப்பதோடு அச் சிறுவர் கள் இருவரும் பிரியாமல் சுகமாக வாழ்வார்கள். தாங் கள் மூன்றில் ஒரு பாகத்திற்கு ஒப்புக்கொள்வதாயின் ஏற்பாடு செய்துவிடலாம்" என்ருன்.

இதைக்கேட்டதே கிழவருக்குக் கோபம் வந்துவிட் டது. "சேசே! ஒரு காலும் அப்படி யுடன்படேன். அவர்கள் என்னை யடியோடு ஏமாற்றி விடும்படி இடங் கொடுப்பதைவிட இந்தச் சிறைச்சாலையிலேயே என் வாழ் நாளைக் கழித்துவிடுவேன். என் பேரப்பிள்ளைகளுக்காக நான் மறுபடி செல்வவந்தனுகவேண்டும். ஆம், நல்ல செல்வவந்த னுகவேண்டும். முக்கால் பாகத்திற்கு ஒரு காசும் குறையலாகாது. நான் இச்சிறைச்சாலையை விட்டு வெளிப்படுவதாயின் செல்வவந்தனுக இங்கிருந்து என் சொந்த வண்டியிலேறியே செல்லவேண்டும் என்று பிரதிக்கினை செய்துகொண் டிருக்கிறேன். ஒருசமயம் இந்த வியாச்சியத்திற்குக் கஷ்டப்படுவதால் தங்களுக்குச்

சலிப்புண்டாயிருப்பதாயின் கூறிவிடும். நான் வேறு லாயரை ஏற்பாடு செய்து கொள்கிறேன்'' என்றான்.

கிழவர் அவ்வாறு கூறியதைக் கேட்டதே அவன் ஒரு சமயம் அப்படியே செய்து விடுவானோவென்று லாயருக்கு பீதியுண்டாய் விட்டது. அவன் உடனே "இல்லை யில்லை. எனக்கு வெறுப்பாவது சலிப்பாவது ஒன்றுமேயில்லை. எப்படியாவது இது ஒரு முடிவிற்கு வந்துவிட்டால் நீர் நிம்மதியடையலாமே என்று தங்களுக்காகக் கருதினேனே யன்றி வேறில்லை. நான் ஏதோ ஒரு ஏற்பாடு இருதாரத்தாரும் ஒப்புக்கொள்ளும்படி செய்ய வேண்டியது என் கடமை. அவ்வளவேயன்றி வேறில்லை. நான் முடிவுவரை என்னாலானதைப் பார்க்கச் சித்தமாகவிருக்கிறேன். உம்மிடம் மூன்றிலொன்றுக்கு ஒப்பும்படி கேட்டேனாயினும் அவர்களிடம், முக்கால் பாகத்தையும் உமக்குக் கொடுத்து விடுவது அவர்களுக்கே இலாபம் என்று வாதாடுவேன்'' என்றான்.

கிழவர் :—எப்படியும் இந்தத் தவணையிலேனும் முடிவிற்கு வருமல்லவா?

லாயர் :—"பெரும்பாலும் அப்படித்தான் கருதுகிறேன்'' என்றான்.

அச்சமயம் ஒரு பெண் ஒரு தூக்குக் கூடையைக் கரத்தில் பிடித்துக்கொண்டு அறைக்குள் வருவதைக் கண்ட கிழவன் சந்தோஷத்தோடு "ஆ! இதோ என் கண்மணியாகிய உண்ணுமுலை வந்துவிட்டாள்'' என்றான். லாயர் உடனே எழுந்து கிழவனிடம் விடைபெற்றுக் கொண்டு அக்கன்னிகைக்கு வந்தனமளித்துவிட்டுச் சென்றார். அக்கன்னிகை உடனே அறைக்குள் தான் கொண்டுவந்த கூடையை வைத்துவிட்டுத் தன் மூதாதையை மிக்க அன்போடு ஆலிங்கனம் செய்துகொண்

டாள். கிழவனும் தன் கண்களில் ஆனந்த பாஷ்பம் சொட்டத் தன்பேத்திக்குப் பன்முறை முத்தமிட்டான்.

உண்ணுமுலே யென்ற அக்கன்னிகைக்கு வயது பதி னெட்டாகிறது. அவள் பராங்குசம் பிள்ளேயின் ஏக புத்திரனுடைய ஒரே பெண். அவளுக்குத் தன் சிறு வயது முதல் சிறைச்சாலே தெரியும். 6-வது 7-வது வயது வரையில் தன் தந்தையோடு கூட அடிக்கடி சிறைச் சாலேக்குத் தன் பாட்டனேக்காண வருவாள். தன் தந்தை யும் பாட்டனும் வியாச்சியத்தைப்பற்றிச் சம்பாஷித்துக் கொண்டிருந்தால் தான் தன் பாட்டன் மடியில் உட் கார்ந்துகொண்டும் படுத்துக்கொண்டு மிருப்பாள்.

அவளுடைய ஏழாவது வயதில் அவள் தந்தை யிறந்துபோனுன். அதன் பிறகு அவள் ஒரு பாடசாலேக்கு அனுப்பப்பட்டாள். வாசிக்கும் காலம் முடியுமட்டும் போஜனம், சயனம், வாசம் யாவும் பாடசாலேயிலேயே யாதலால் ஞாயிற்றுக்கிழமை விடுமுறை தினந்தோறும் அவள் தாய் அவளே யழைத்துக் கொண்டுபோய் அவள் பாட்டனேக் காணச்செய்வாள். பிறகு அவளுடைய பனிரண்டாவது வயதில் அவள் தாயாரும் இறந்துபோக அவள் நிராதரவாய் விட்டாள்.

ஆயினும் அவளுடைய அத்தை, பராங்குசம் பிள்ளே யின் ஒரே புத்திரி, விதவையாகித் தன் ஏக புத்திரனேடு வசித்துக்கொண் டிருந்தாள். உண்ணுமுலே யங்கு விடப் பட்டாள். அவளுடைய அத்தை யவளேத் தன் புத்திரி போல மிக்க அன்போடு ஆதரித்து வந்தாள். அவளுடைய அத்தையின் புதல்வன்றான் கிருஷ்ணராஜு என்ற வாலிபன். அவன் உண்ணுமுலேக்கு இரண்டு வருடமே மூத்தவன். சிறு பிராயமுதல் இவர்கள் ஒருவருக்கொரு வர் மிக்க விசுவாசத்தோடு விளேயாடிக்கொண் டிருந்த

வர்கள் உண்ணாமுலையின் தாய் இறந்தது முதல் உண்ணா முலை தான் தினந்தோறும் தன் பாட்டனுக்கு சிறைச் சாலைக்கு ஆகாரங்கொண்டுபோவாள். பெரும்பாலாகக் கிருஷ்ணராஜு அவள்கூடச் செல்வான்.

நமது கதைதொடங்க இரண்டு வருட மிருக்கையில் உண்ணாமுலையின் அத்தையாரும் இறந்துபோனாள். அது முதல் உண்ணாமுலையும் கிருஷணராஜுமே தனியாக வசிக்க வேண்டிய தாயிற்று. அதோடு தங்கள் ஜீவனத் திற்கும், தங்கள் பாட்டனாரைப் போஷிக்கவும் உண்ணா முலையே வேலை செய்யவேண்டிய தாயிற்று. அவள் தையல் வேலையில் மிக்க கெட்டிக்காரி. செல்வச் சீமாட் டிகளுக்கு விலையுயர்ந்த உடுப்புகள் தைப்பதற்கு அதிக கூலி கொடுக்கப்பட்டு வந்தது. அக்காலத்தில் தையல் எந்திரம் கண்டு பிடிக்கப்படவில்லை. ஆனால் கஷ்டப்பட்டு தைக்கும் ஏழைகளுக்கு அதனால் வரும் முழுப்பணமும் கிடைப்பதில்லை. ஏனெனில் சீமாட்டிகள் துணிகள் விற் கும் வர்த்தகரிடமே உடைகளைத் தைத்துக் கொடுக்கும் படிகட்டளையிட்டு விடுவார்கள். அவ்வர்த்தகர்கள் ஏழைப் பெண்களிடம் துணியைக் கொடுத்து தைக்கச்செய்து அவர்களுக்குக் கூலி தாங்களே கொடுத்து விடுகிறார்கள். தைத்த உடைகளை மட்டும் அப்பெண்களே சொந்தக்கார ரிடம் கொண்டுபோய்க்கொடுத்து வேலையைப்பற்றி அவர் களுக்குத் திருப்தி யுண்டாகச் செய்யவேண்டும். சீமாட் டிகளிடம் கடைக்காரன் ஒரு உடுப்பிற்கு ஐந்து ரூபாய் வாங்குகிறானென்றால் அதைத்தைத்த ஏழைப் பெண் ணுக்கு அச்சண்டாளன் ஒரு ரூபாய் ஒன்றரை ரூபாய் கொடுத்தால் அதிகம். இவ்வாறு அந்த ஏழைப்பெண்களை மோசம்செய்து செல்வமுடைய வர்த்தகர் பணம்பறித்துக் கொண் டிருந்தார்கள்.

இவ்வாறான தொழிலால் மூவர் ஜீவனத்திற்கு வேண்டியதைச் சம்பாதிக்க வேண்டுமாயின் அப்பெண் எவ்வளவு கஷ்டத்தோடும் சுறுசுறுப்போடும் வேலைசெய்ய வேண்டுமென்பதை இதை வாசிப்போரே சிந்திக்கலாம். அதிலும் தன் பாட்டனுக்குக் கூடிய வரையில் நல்ல ஆகாரம் படைக்கவேண்டும். சுருட்டு மூக்குத்தூள் வாங்கியளிக்க வேண்டும். அப்போதைக் கப்போது சாராயமும் வாங்கிக்கொண்டு போய் தரவேண்டும்.

கிழவர் இவையாவும் தனக்களிக்கும்படி அவளை வருத்துகிறார் என்றல்ல. அவள் தன் வயதுமுதிர்ந்த பாட்டன்மேல் வைத்திருக்கும் அன்பினால், "ஏவாமக்கள்மூவா மருந்து" என்ற பழமொழிப்படி இப்படித் தானே நடந்து கொள்ளுகிறாள். அவள் பகல்முழுதும், இரவு ஒரு மணிவரையிலுங் கூட உழைக்கிறாள் என்பதும், மிகக் குறைந்த கூலிக்குப் பாடுபடுகிறா ளென்பதும் கிழவருக்குத் தெரியாது. அவளுடைய தையல் சாமார்த்தியத்தால அதிகமாகச் சம்பாதிக்கிறாள் என்றே அவர் நம்பியிருக்கிறார். சாதாரணமாகத் தையல்வேலை செய்வோர்கள் மிக்க கஷ்டப்படுகிறார்க ளென்பது அவருக்குத் தெரியுமெனினும் நல்ல அதிஷ்டத்தால் நமது பேத்திமட்டும் சீவகாருண்ணியமும் நீதியு முடையவர்களிடம் வேலைசெய்வதால் தாராளமான கூலி பெறுகிறாளென்று அவர் கருதியிருக்கிறார். உண்ணாமுலையே வேணுமென்று அவர் அவ்வாறு அபிப்பிராயப் படும்படி கூறியிருக்கிறாள். தான் கஷ்டப்படுவதை யுணர்ந்தால் அவர் மனதிற்கு வியாகூலமுண்டாகு மென்று கருதி அவள் அப்படிச் செய்து வருகிறாள். அவளுக்குத் தன் பாட்டன்மேல் இருந்த பேரன்பு அத்தகையது.

சிறைச்சாலையிலுள்ள காவலர்கள் உண்ணாமுலையைச்

சிறுவயதிலிருந் தறிவார்கள். அவள் காண்போர் மயங்கும் அழகுடையவளல்ல வெனினும், காண்போர் விரும்பத்தக்க இனிய முகவிலாசமும் கருணையான பார்வையும் இன்சொல்லும் மரியாதையும் உடையவள். சிறைச்சாலையி லுள்ளவர்க ளனைவரும் அவளை மரியாதையாகவே நடத்தினர்கள். அவள் சிறைச்சாலை சட்டத்திற்கு விரோதமாக அப்போதைக் கப்போது தன் பாட்டனுக்குச் சாராயம் கொண்டு வருகிறளென்று அவர்களுக்கெல்லாம் தெரியும். ஆயினும் அவளுக்குக் கெடுதிசெய்ய ஒருவருக்கும் மனம் வரவில்லை. அவள் தன் பாட்டனரிடம் பக்திவைத்து நடப்பது யாவருக்கும் மிக்க வியப்பை யுண்டாக்கியது.

உண்ணுமுலை தன் பாட்டனை நோக்கி "லாயர் தம்பு சாமிபிள்ளை ஏதேனும் நல்லசங்கதி கொண்டுவந்தாரோ?" என்றாள்.

கிழவர் மிக்க உற்சாகத்தோடு, "இந்த முறை வியாஜ்ஜியம் எப்படியும் முடிவிற்கு வந்துவிடும். ஓ குழந்தாய்! அதுமட்டும் நமக்கு அனுகூலமாய் விட்டால், ஓ! நாம் எவ்வளவோ பணக்காரராக ஆய்விடுவோம். நாம் நல்ல அழகான வீட்டில் வசிப்போம். நீ எங்கே செல்வதாயினும் வண்டியிலேயே செல்வாய். நீ இனி ஒரு வேலையும் செய்ய வேண்டாம். உனக்குப் பிரியமானல் நல்ல அழகான தையல்வேலை பூவேலைகளைச் செய்யவேண்டுமே யொழிய நீ வேலைசெய்ய வேண்டிய அவசியமில்லை. நமக்கு வேலைசெய்ய அனேகம் வேலைக்காரர் இருப்பார்கள். ஓ! நாம் மிக்க சுகத்தோடும் செல்வத்தோடும் வாழலாம். இப்போ தனுபவிப்பவற்றை யெல்லாம் அடியோடு மறந்துவிடுவோம். அப்போது நீ யுடனே ஒரு குதிரைவண்டி வாங்குவாய். நான் இங்கிருந்து வெளியில் வரும்போது என் சொந்தவண்டியில்தான் வருவேன். இங்கிருப்பவர்க

ளுக்கெல்லாம் நல்ல விருந்தளித்துவிட்டுத்தான் செல்ல வேண்டும். அம்மாதிரி செய்வதாக நான் வாக்களித்திருக்கிறேன்'' என்றான்.

இம்மொழிகளைக்கேட்ட கன்னிகை மனதில் மிக்க வியாகூலமடைந்தாலும், மேலுக்குத் தான் தன் பாட்டன் கூறிய யாவும் நம்புவதாகவும், அதனால் சந்தோஷமடைவதாகவும் அபிநயித்தாள். அவளுக்கு ஏன் துயரமெனில், இந்த வியாஜ்ஜியம் தன் பாட்டனுக்கு அனுகூலமாகும்படி அதில் நியாயமிருந்தால் இவ்வளவு காலமாக அது எங்கேனும் முடிவிற்கு வராதிருக்குமோ என்பது அவள் யோசனை. ஆயினும் தன் பாட்டன் மனதிற்கு சந்தோஷத்தையே யுண்டாக்க வேண்டுமென்று அவ்வாறு நடந்து வந்தாள்.

கிழவன் அவளை நோக்கி "தம்புசாமிப்பிள்ளை நான் பைத்தியக்காரன் என்று கருதி மூன்றில் ஒரு பாகத்தை வாங்கிக் கொள்ளும்படி கூறுகிறான். நானா அதற்கு ஒப்புவேன். நான் அந்தத் துளசிங்கம் பிரபுவைப் பிச்சைக்காரனாக்காமல் விடமாட்டேன். அவர்கள் அழிந்து போகவேண்டும். அந்தக் குடும்பத்தில் எவர் பெயரையும் நீ நரகத்தை வெறுப்பதுபோல் வெறுக்கவேண்டும்'' என்றான்.

இம்மொழிகளைக்கேட்ட அக்கன்னிகை மிக்க பயமும் துயரமுமடைந்து "தாதா! தங்கள் வாக்கில் இத்தகைய மொழிகள் வருவது எனக்கு மிக்க விசனத்தையளிக்கிறது'' என்று மிக்க முகவாட்டத்தோடும் மனச்சோர்வோடும் கூறினாள்.

அவள் அவ்வாறுகூறித் தன் பாட்டன் முகத்தைப் பார்த்தபோது அவர் மிக்க கோபத்தோடு ஏதோ கூறு

வார்போல் தோன்றியது. அதனால் உடனே சம்பாஷணையை யடியோடு மாற்றி விடவேண்டுமென்று கருதி,

"ஓ பாட்டனாரே! நான் இப்போது எவ்வளவு நல்ல கன்னிகைகளுக்காக வேலை செய்கிறேன் தெரியுமா? அவர்கள் சின்னத் தோப்பில் வசிக்கிறார்கள். மிக்க நாணயமும் யோக்கியமுமானவர்கள். உனக்குச் சிநேக மான ரொட்டிக் கடைக்காரன் இருக்கிறானே நமது வீட்டருகில், அவன் அக்கன்னிகைகளின் வீட்டிலிருக்கும் இராஜம்மாள் என்ற ஒரு வேலைக்காரியிடம் என்னைப் பற்றி கூறினான். அம்மாது மிக்க நல்லவள். அவள் தன் எஜமானிகளுக்குக் கூறினாள். அக்கன்னிகைகளில் ஞானம்பாள் என்பவள் மிக்க நல்லவள். இரக்கமுடையவள். அவள் என்மேல் மிக்க அன்பு வைத்திருக்கிறாள். அவள் சகோதரியாகிய செல்வாம்பாள் என்பவள் இத்தகைய விஷயங்களையெல்லாம் கவனிப்பவளாய்க் காணோம்." என்றாள்.

கிழவர்:—"ஓ! நீ க்ஷேமமாகவே யிருப்பாய். கடவுள் உனக்குக் கஷ்டம் வையார். ஆச்சு இன்னும் கொஞ்ச நாட்கள் பொறு. அப்புறம் உனக்கு வேலை செய்ய ஆட்களிருப்பார்கள்." என்றார்.

உண்ணுமுலை தன் மனதிலுள்ள துயரத்தை மறைத்துக்கொண்டு மிக்க சந்தோஷமாக விருப்பவள்போல் அபிநயித்து, தன் பாட்டனுக்கு அன்னமளித்துவிட்டு அரிதிற் பிரிந்து சென்றாள்.

14-வது அத்தியாயம்.

கனவின் எச்சரிக்கை.

முன் அத்தியாயத்தில் கூறப்பட்ட சங்கதிகள் நடந்த மறுநாள் பின் வரும் சம்பவங்கள் நேர்ந்தன. ஞானம்பாள் தினம் வழக்கமாக எழுந்திருப்பது போல் அதிகாலையில் எழுந்திருந்து தன் சகோதரி இன்னும் நித்திரை செய்வதைக்கண்டு அவளை யெழுப்பலாகா தென்று தோட்டத்தில் உலவச் சென்றாள். ஏனெனில் இரவு செல்வாம்பாள் ஏதோ பயங்கரமான கனவுகண்டு அலறினாள். அதனால் அவள் அசௌக்கிய முற்றிருக் கிறாள் என்று எழுப்பவில்லை. கடைசியில் வேலைக்காரி யாகிய இராஜாம்பாள் காலைப்போஜனம் ஆயத்தமாய் விட்டது என்றதும் வீட்டிற்குத் திரும்பிச் செல்வாம் பாள் அறைக்கு மெதுவாகச் சென்றாள். அப்போதும் அவள் எழுந்திருக்க வில்லை. கடைசியில் சுமார் பத்து மணிக்கு எழுந்தாள்.

இருவரும் போஜனம் செய்துகொண் டிருக்கையில் ஞானம்பாள் தன் சகோதரியை நோக்கி "இரவு நீ அசுக மடைந்து விட்டாய்போ லிருக்கிறது" என்றாள். செல் வாம்பாள், "ஆம். நான் பயங்கரமான கனவுகண்டேன், நீ என்னை யென்னமோ கேட்டாய். ஆனால் நான் பதில் கூறியதாகக் கவனமில்லை" என்றாள். அக்கனவினால் அவள் மனதில் இன்னும் பயமிருக்கிறதென்று ஞானம் பாளுக்கு புலப்பட்டது.

செல்வாம்பாள் "அத்தகைய கனவு எனக்கு எப்படி யுண்டாயிற்றென்று விளங்க வில்லை. ஒரு சமயம் நான் வாசித்த நாவலினாலோ? இல்லை, அத்தகைய கனவு உண்டாவதற்கு அதில் ஒரு சம்பவமுமில்லை. அது வேறு

முகாந்திரத்தால் உண்டாகியிருக்கவேண்டும்'' என்ருள்.

ஞானம்பாள் :—சகோதரியே! நீ கண்ட கனவு இன்னதென்று கூறுபார்ப்போம். ஆனல் நான் என்னவோ கனவுகளை நம்புவதில்லை.

செல்வாம்பாள் :—இல்லை, நானும் அப்படியே கருதுகிறேன். ஆயினும், சகோதரியே! கனவைப்பற்றியுன் அபிப்பிராயமென்ன கூறு பார்ப்போம்.

ஞானம்பாள் :—"கனவு வேறென்றுமில்லை. மனம் எப்போதும் வேலைசெய்து கொண்டேயிருக்கிறது. விழிப்பில் நாம் நமது பிரியப்படி மனதை நடத்துகிறோம். கெட்டது நல்லது, சந்தோஷம் துக்கம் யாவும் அனுபவிக்கிறோம். நித்திரையில் மனம் வரம்பின்றித் தன் பிரியப்படி எல்லா வற்றிலும் நுழைகிறது. விசேஷமாகப் பகலில் நாம் எதில் அதிகமாக மனதைச் செலுத்தினேமோ, அல்லது எதில் மனம் அதிகமாக உறுத்தியதோ, அதை நினைத்துக் கொள்கிறதே கனவு. இவ்வளவேயன்றி அதில் வேறு விசேஷம் ஒன்றுமில்லை.'' என்ருள்.

செல்வாம்பாள் "அப்படியாயின் நான் கண்ட கனவைப்பற்றி கூறுகிறேன். அதன் பிறகும் உனக்கு இதே அபிப்பிராயம் இருக்கிறதா கூறு பார்ப்போம்'' என்ருள்.

ஞானம்பாள் கூறு என்று கவனமாகக் கேட்கத் தொடங்கினள். செல்வாம்பாள் பின் வருமாறு கூறினள்.

"இரவு, நான் கடைக்குச் சென்று ஒரு சட்டை வாங்கிவந்தேன். நீ அதைக்கண்டதும் கோபத்தோடு என்னை நோக்கி "இன்னும் கலியாணமாகாத நம்போன்ற கன்னிகைகள் இத்தகைய படாடோபமான சட்டைகளை

யணிவது சற்றும் தகுதியல்ல. இத்தகைய விஷயத்தில் உன்மனம் சென்றதைப் பற்றி மிக்க விசனிக்கிறேன்" என்றாய். நான் மனவருத்த மடைந்து உடனே அச் சட்டையை மேஜைமேல் எறிந்து விட்டேன். அச்சமயம் இராஜாம்பாள் வந்து நமக்கு அறிமுகமான யாரோ ஒரு நண்பர் வந்து ஏதோ பரிசுகளை யளித்துச் சென்றதாக கூறினாள். ஆனால் பிறகு அவற்றை யார் எடுத்துவந்து நமது அறைக்குள் வைத்தார்களென்பது எனக்கு விளங்க வில்லை. பிறகு நடந்த சம்பவம் என்னவெனில், உன் கையில் ஒரு சிறுபெட்டி யிருக்கிறது. அது அழகிய செம்மரத்தால் செய்யப்பட்டு மேலே முத்துச் சிப்பிகள் இழைக்கப்பட்டு மிக்க அழகாகப் பிரகாசிக்கிறது. நீ யதைத் திறந்தபோது அதில் இரோஜா புஷ்பத்தால் செய் யப்பட்ட ஒரு மாலைமட்டு மிருந்தது. அதே சமயம் என் எதிரில் ஒரு பெரிய நீண்ட பெட்டி யிருக்கிறது அது ஒரு சவப்பெட்டியளவு நீண்டிருக்கிறது. ஆனால் அகலத் தில் அவ்வளவில்லை.

சகோதரியே! நான் அதைத் திறந்ததே அதில் ஏதோ நீண்ட ஒருவஸ்து விருப்பதுபோல் தோன்றியது. அதன்மேல் ஒரு வெள்ளைச்சீலை மூடப்பட் டிருந்தது. நான் அச்சீலையை யெடுத்ததும், ஓ கடவுளே! அதன் கீழ் ஒரு மனிதனுடைய முழு எலும்புக் கூடிருந்தது. அப்போதுதான் அவ்வாறு அலறிக் கூவினேன்." என்றாள்.

186588

இவையாவும் கேட்ட ஞானம்பாள் முன்னம் தான் கனவை ஒருவிசேஷ முடையதாகக் கருதவில்லை யென்று கூறினும், இப்போது மிக்க கலக்கமும் துயரமு மடைந்தாள். சற்றுநேரம் இருவரும் மௌனமாக விருந் தார்கள். கடைசியில் செல்வாம்பாளே பேசத் தொடங்கி

"சகோதரியே! இதைக்கேட்டபின் உன் அபிப்பிராயத்தில் ஏதேனும் மாறுதல் உண்டாகிறதோ?" என்றாள்.

ஞானம்பாள்:—"என் அபிப்பிராயத்தையே யிது உறுதிப்படுத்துகிறது. அதாவது மனம் பிரியப்படி விஷயாதிகளில் பிரவேசிப்பதே யன்றி வேறொன்றுமில்லை" என்றாள்.

செல்வாம்பாள்:—ஆயினும் நிகழ்ந்த விஷயங்களையே மனம் மறுபடி நித்திரை காலத்தில் நினைத்துக்கொள்கிறது என்றாய். மனம் தினம் தானே அப்படிச் செய்கிறது. அப்படியிருக்கத் தினம் நாம் கனவு காண்பதில்லையே, ஏன்?

ஞானம்பாள்:—மனம் தினம் அப்படிச் செய்தாலும் யாவும் நமக்கு விழித்தபின் நினைவிருப்பதில்லை. நினைப்பிற்கு வருவதை மட்டும் கனவு கண்டதாகக் கூறுகிறோம்.

செல்வா:—"ஆயினும் இக்கனவில் ஒரு குறிப்பிருப்பதாகவே எனக்குத் தெரிகிறது. நான் கடைக்குச் சென்று ஒரு சட்டை வாங்கிவந்தேன். அது தகாததென்று நீ கண்டித்து விட்டாய். பிறகு யாரோ நம்மிருவர்க்கும் இரண்டு பரிசளித்தார்கள். உன் பெட்டியில் ஒரு அழகிய பூமாலை மட்டும் இருந்தது. என் பெட்டியில் ஒரு எலும்புக் கூடிருந்தது. இதனால் உலகபோகங்களின் ஆடம்பரங்களனைத்தும் கடைசியில் இம்மாதிரி அழிவடைவதாகும் என்று அறிவிப்பதுபோல் தெரிகிறது" என்றாள்.

ஞானம்பாளுக்கு ஒருவிதத்தில் சந்தோஷமும் ஒருவிதத்தில் துயரமும் உண்டாயின. தன் சகோதரி தன் செய்கைகள் மிக்க படாடோபமானவை யென்று உணர்ந்துகொண்டு, இப்போது அவை யாவும் கடைசியில்

அழிந்து போகத் தக்கவைகளே யென்று தெரிந்ததால் இனி எச்சரிக்கையாகவே நடந்து கொள்வாள் என்று சந்தோஷ மடைந்தாள். ஆனால் அவள் மனதில் அக்கனவு வேறொரு குறிப்பை யறிவிக்கலாகும் என்று புலப்பட்டது. அதாவது, புஷ்பமாலை தன் வாழ்நாள் சந்தோஷமாகவும் சுகமாகவும் கழிபு மென்பதையும், எலும்புக் கூண்டு செல்வாம்பாளின் வாழ் நாள் மிக்க இடுக்கண்களையும் துக்கத்தையும் உடைத்தா யிருக்கு மென்றும் அவள் மனதிற்குப் புலப்பட்டதால் மிக்க துயரமு மடைந்தாள். ஆயினும் செல்வாம்பாள் தானே அக்கனவை அவ்வாறு அர்த்தம் செய்து கொண்டதே நலமாயிற்றென்று நிம்மதி யடைந்தாள்.

அதன் பிறகு சகோதரிக ளிருவரும் அச்சங்கதியை மறந்துவிட வேண்டுமென்று தீர்மானித்து வேறு விஷயங்களைப் பற்றி பேசிக்கொண் டிருந்தார்கள். மணி சுமார் பதினொன்றரை யாயிற்று. அச்சமயம் உண்ணாமுலை யென்ற கன்னிகை சகோதரிகளுக்குத் தைத்த உடுப்புகளை யொரு பெட்டியில் வைத்து எடுத்துக்கொண்டு சுகவிலாசத்திற்கு வந்தாள். அங்குள்ள வேலைக்காரி இவளுடைய நிலைமையைப் பற்றியும் இவள் தன் பாட்டனுக்காக உழைப்பதைப் பற்றியும் சகோதரிகளிடம் கூறியிருப்பதால் ஞானம்பாள் அவளை மிக்க பட்சத்தோடு வரவேற்று உட்காரும்படி ஆசனமளித்து உபசரித்தாள்.

உண்ணாமுலை ஞானம்பாள் காட்டிய அன்பினால் மனங்கரைந்து கண்களில் நீர் துளித்துக்கொண்டே தான் கொண்டுவந்த உடைகளை யெடுத்தளித்தாள். உடைகள் தைக்கப் பட்டிருந்த நேர்த்தியைக் கண்ட ஞானம்பாள் மிக்க சந்தோஷமடைந்து உண்ணாமுலையைப் புகழ்ந்து, கடைக்காரன் இவளுக்களிக்கச் சொன்ன கூலி மிக்க

குறைவென்று கூறிக்கொண்டே அதற்கு இரண்டத்தனை பணத்தையொரு கடிதத்தில் வைத்து மடித்து அடக்கமாக உண்ணுமுலையின் ஜேபியில் போட்டுவிட்டு நீ நடந்தா வந்தாயென்று வினவினுள். கன்னிகை ஆம் என்றதும், ஞானம்பாள் "அந்தோ! நீ களைத்தும் பசியடைந்துமிருக்கவேண்டும். கொஞ்சம் ஆகாரம் புசித்துச் சற்று இளைப்பாறிச்செல்" என்று கூறி, வேலைக்காரியை யழைத்து அவள் செவியில் இரண்டொரு வார்த்தைகளைக் கூறினுள்.

வேலைக்காரி யுடனே உண்ணுமுலையை யழைத்துச் சென்று போஜன அறையில் உட்காரவைத்து விட்டுத் துரிதமாக நல்ல ஆகாரம் கொணர்ந்து வட்டித்தாள். ஞானம்பாள் அங்குவந்து உண்ணுமுலையை நோக்கி "நீ சாவதானமாகப் போசனம்செய்துவிட்டு வா. பிறகு இன்னும் உடைகள் தைக்கவேண்டியதற்குச் சாமான்கள் அளிக்கிறேன்" என்று கூறிவிட்டுச் சென்றுள்.

ஞானம்பாள் மறுபடி செல்வாம்பா ளிருக்கும் அறைக்குச் சென்று "நான்போய் உடைகள் தைப்பதற்குச் சாமான்கள் கொடுத்தனுப்ப ஆயத்தப்படுத்தி வைத்து விட்டு வருகிறேன்" என்று கூறித் திரும்பும்போது நீலாட்சி அங்குவந்தாள். ஞானம்பாளும் செல்வாம்பாளும் அவளை யன்போடு வரவேற்றபின் ஞானம்பாள் இதோ வந்துவிட்டேனென்று தன் அறைக்குச் சென்றுள்.

நீலாட்சி சகோதரிகள் தன்னை வந்து கண்டபடியால் தானும் அவர்கள் வீட்டிற்குச் சென்று அவர்களைக் காண வேண்டுமென்று வந்தாளெனினும், அவள் வந்ததற்கு இன்னொரு முக்கியகாரணம் உண்டு. அதாவது அவள் சின்னம்மாளிடம் எந்த மனிதனைப்பற்றி விசாரித்தா

ளோ அவன் சுகவிலாசத்திற்கு வரத்துப் போக்காக விருக்கிறுனென்று கேள்விப்பட்டா எல்லவா, அவன் விஷயத்தில் சகோதரிகள் எத்தகைய அபிப்பிராயங் கொண் டிருக்கிறுர்க ளென்பதையும், இரண்டு கன்னிகை களில் யார்மேல் அவன் காதல்கொண் டிருக்கிறு னென் பதையும் அறிந்துகொள்ளவே வந்தாள்.

இப்போது செல்வாம்பாள் தனியாக விருக்கவே, இதுதான் சமயமென்று ஜாடையாய் "நீங்கள் இந்தத் தனியிடத்தி லிருக்கிறீர்களே, அருகில் சிநேகிதர்களா வது அறிமுக மானவர்களாவது ஒருவரு மில்லாமல் இரு டிகள்போலிருந்தால் உங்களுக்குப் பிடிக்கிறதா?'' என்றுள்.

செல்வாம்பாள் "எங்களுக்குப் பல சிநேகிதர்கள் இருக்கிறுர்கள். அவர்களில் பெரும்பாலார் உன் பெரிய தந்தையின் வீட்டிற்கு வருகிறவர்களே. அங்குதான் எங்க ளுக்கு அறிமுக மானுர்கள்...'' என்றுள்.

நீலாட்சி:—"நான் இனி அடிக்கடி உங்கள் சகவாசத்தை விரும்பி இங்குவரவேண்டி யிருக்கும். உங்கள்சிநே கிதர்களை யிங்குசந்திக்க நேரிடும்; ஆகையால் இங்கு யாரார்ரை, எப்படிப் பட்டவர்களை, நான் சந்திக்க நேரிடு மென்பதை யறிந்திருந்தால் நலம் என்று கருதுகிறேன். தயவுசெய்து கூறு பார்ப்போம்'' என்றுள்.

செல்வாம்பாள்:--ஏன், கனம் குலசேகரன் என்றவாலிபன் வருகிறதுண்டு. அவன் சேனுநாயகம் பிரபுவின் புத் திரன். எந்நேரமும் பேசுவதில் மிக்க பிரியமுடைய வன். குதிரைப் பந்தயத்தைப் பற்றியே விசேஷமா கப் பேசுவான். கனம் இராஜகோபால் என்ற வாலி பன். அவனும் நல்ல கம்பீரமான தோற்ற முடைய

வன். பேச்சிலும் மிக்க கெட்டிக்காரன். சாதுரியமாகப் பேசுவான். இவர்களெல்லாம் லாயர் தம்புசாமி பிள்ளை வீட்டிற்கு வருகிறவர்களல்ல. இன்னும் கனம் அச்சுதன் என்ற வாலிபன். அவன் திரவியநாதம் பிரபுவின் புத்திரன், தேவராஜப்பிள்ளை யென்ற வாலிபன். இவன் துரைத்தன உத்தியோக சாலையில் ஒரு சாதாரண இலிகிதனே எனினும் மிக்க யோக்கியமும் நாணயமு முடையவன். நமது வீட்டிற்குச் சமீபத்தில்தான் தன் தாயாரோடு வசிக்கிறான். ஆ! அந்தக்கனம் அச்சுதன் இனி இங்கு வரமாட்டானென்று கருதுகிறேன்...'' என்றாள்.

நீலாட்சி "ஏன்? அவன் தேக அசௌக்கிய முற்றானா? அல்லது வெளிநாட்டிற்குச் சென்றிருக்கிறானா? என்ன காரணத்தால் இனிவரா னென்று கருதுகிறாய்?'' என்றாள்.

அச்சமயம் அறைக்கு யாரோவரும் காலடிச்சத்தம் கேட்ட செல்வாம்பாள் "ஹா! பேசவேண்டாம், ஞானம்பாள் வருகிறாள். வாய்ப்பதட்டமாகப் பேசுகிறேனென்று கோபிப்பாள்'' என்றாள்.

ஞானம்பாள் தைக்கவேண்டிய சாமான்களை யெல்லாம் உண்ணாமுலையிட மளித்துவிட்டு இன்னும் சற்று நேரமிருந்து இளைப்பாறும்படி அவளுக்குக் கூறிவிட்டு, செல்வாம்பாளும் நீலாட்சியு மிருக்கும் அறைக்குவந்தாள். வேலைக்காரியாகிய இராஜாம்பாள் உண்ணாமுலையை இளைப்பாறிச்செல்ல அங்கு இன்னும் சற்றுநேரம் நிறுத்திவைக்கும் பொருட்டு அவளோடு சம்பாஷித்துக் கொண்டிருந்தாள்.

இப்போது நாம் இவர்களைச் சுகவிலாசத்திலேயே விட்டுவிட்டு வேறு விஷயங்களைக் கவனிக்கவேண்டி யிருக்

கிறது. இதேதினம் ஒன்றின்மேல் ஒன்றாக நமது கதையின் தொடர்ச்சிக்கு அவசியமான சில ஆபூர்வ சம்பவங்கள் நேரிடுகின்றன. மணி ஒன்றிருக்கும்; அச்சமயம் தேவராஜ பிள்ளை வசிக்கும் புதுமனை யென்ற வீட்டெதிரில் ஒரு வண்டி வந்து நின்றதும் லாயர் தம்புசாமிப்பிள்ளை யதினின்றிறங்கி வீட்டிற்குள் சென்றான். தேவராஜின் தாயார் அவனை வரவேற்று உபசரித்ததும் "நாம் பேச வேண்டிய சங்கதிகளைச் சீக்கிரம் பேசி முடித்து விடுவது நலம். ஏனெனில் என்புத்திரன் இன்று சீக்கிரம் வந்து விடுவதாய்க் கூறிச்சென்றான்" என்றாள்.

லாயர்:—நான் நேற்று கூறியபடி அந்த விஷயத்தைப்பற்றிய விவரம் ஏதேனும் தெரிந்து கொண்டீர்களா?

அம்மாது:—ஒன்றும் அறிந்துகொள்ளக் கூடவில்லை. நான் என் புத்திரனிடம் இதைப்பற்றி கடிந்துபேசவாவது புத்திமதி கூறவாவது முடியவில்லை. ஏனெனில் இது நேருமுன் இரண்டு மூன்று மாதமாக அச்சுதன் என்புத்திரனிடம் அன்போடும் மரியாதையோடுமே பேசிக்கொண்டிருந்தான். அத்தகையவனோடு இப்படி நடந்து கொள்ள நேர்ந்ததே யென்று என் மகன் தானே மிக்க வியாகூலப் பட்டுக்கொண் டிருக்கிறான்.

லாயர்:—நேற்று நான் பிரபுவை மறுபடி சந்தித்துப்பேசினேன். இவர்களிருவரும் மறுபடி சினேகமாய் விடுவார்களோ? பெரும்பாலும் முன்னிருந்ததை விட மிகச் சினேக முடையவர்களாகி விடுவார்களோ என்பதே யிப்போது சிந்திக்கத்தக்கது.

அம்மாது: — அப்படித் தான் கருதவேண்டி யிருக்கிறது. அதுவே எனக்குப் பெரிய பயமாக விருக்கிறது.

லாயர்:—அப்படி நேரிட வொட்டாமற் செய்வது........

அம்மாது:—ஆம் அதைத் தடுக்கவே வேண்டும், அது அவசியம் செய்யவேண்டிய வேலை யென்பதே யென் அபிப்பிராயம்.

லாயர்:—அப்படியாயின் அவனை வேறு உயர்ந்த வேலைக்கு மாற்றிவிட்டால்?

அம்மாது:—ஆ! அவ்வளவு செய்தால் மிக்க நன்றி பாராட்டுவேன்.

லாயர்:—ஆனால் இந் நகரைவிட்டுத் தூரத்திலுள்ள ஒரு விடத்திற்கு.

அம்மாது:—ஆகா! இவ் வூருக்கு வர எனக்குச் சற்றும் விருப்பமே கிடையாது. பிரபுதான் அவனை இதே வேலையில் அமர்த்தவேண்டுமென்று வற்புறுத்திக் கூறினார். இங்கு வராதிருந்தால் இச்சம்பவம் நேரிட்டே யிராது.

லாயர்:—"சரி, நான் பிரபுவுக்குக் கூறி பின்னால் வந்து சங்கதி தெரிவிக்கிறேன். இப்பிரதேசத்தில் எங்கோ சமீபத்திலேயே துளசிங்கம்பிரபு என்பவருடைய மாளிகை யிருக்கிறது. அதற்கு எப்படிப் போக வேண்டுமென்று எனக்குப் புலப்படவில்லை. நான் அங்கு செல்லவேண்டிய வேலை யிருக்கிறது. இப்படியே அதையும் பார்த்துக்கொண்டு போய்விடுவது நலமாகும்." என்றான்.

தேவராஜின் தாய்க்குத் துளசிங்கம் பிரபுவின் மாளிகை யிருக்குமிடம் தெரியும். அது இவர்கள் வீட்டிற்கு ஒருமைல் தூரத்திலிருக்கிறது. அதற்கு வழி கூறியதும் லாயர் அங்கிருந்து சென்றான். மணி இரண்டடிக்கக் கால்மணி யிருக்கிறது. தேவராஜன் தன் வேலையை விட்டு வந்ததும் இருவரும் உலவச் செல்லவேண்டுமென்று ஏற்பாடாகையால், அவன் தாயார் தன் புத்திரன் வரும்

வேளை யாய்விட்டதென்று கருதி தன் அறைக்குச் சென்று உடுத்திக்கொண்டு தெருவாயிற்படியில் வந்து நின்று, அவன் வரும் பாதையை நோக்கிக்கொண் டிருந்தாள். லாயர் வந்து பேசிவிட்டுச் சென்ற சங்கதி இன்னும் அவள் மனதினின்றும் நீங்கவில்லை.

15-வது அத்தியாயம்

மர்மமான விஷயங்கள்.

தேவராஜின் தாயார் வாயிற்படியிலிருந்து பாதையைப் பார்த்துக்கொண்டே யிருக்கையில் தூரத்தில் ஒரு ஸ்திரீ வருவதுபோல் தோன்றியது. முதலில் அவள் யாரென்று தெரியவில்லை. அவள் சமீபத்தில் வர வர சின்னம்மாள் என்ற கிழவியென்று தெரிந்தது. அவள் மிக்க படாடோபமான உடையும் மோதிரம் காதணி முதலிய நகைகளுமணிந்துகொண் டிருந்தாள். தேவராஜின் தாயார் மிக்க வெறுப்படைந்து கதவை மூடிக்கொண்டு உள்ளே போய்விடக் கருதினாள். அச்சமயம் அக்கிழவி ஒருவித அதிகாரமான பார்வையோடு நில் என்று சமிக்கை செய்தாள்.

அம்மாது திகிலடைந்து பிரமித்து நின்றுவிட்டாள். பெரிய மர்மமான ஒருபீதி அவள் மனதில் பற்றிக்கொண்டது. கிழவி அவளருகில் வந்து "நான் உன்னைத் தொந்தரவு செய்ய வரவில்லை. எனக்கு வேறு விவகாரம் இருக்கிறது. ஒருவர் பெருமை காட்டுவது எனக்குப் பிடிப்பதில்லை. நீ என்னைக்கண்டு பெருமையோடு கதவை மூடிக்கொண்டு உள்ளே செல்ல நினைத்தாய்" என்றாள்.

அவள் தன்னைத் தொந்தரவு செய்ய வரவில்லை யென்றதைக் கேட்டதும் அம்மாதுக்கு மனக்கலக்க மொழிந்

தது. ஆயினும், அவளிடம் நல்லதனமாகப் பேசவும் தைரியமில்லே. அவள் விஷயத்தில் அவ்வளவு பீதி யிருக்கிறது.

அக்கிழவி:—“பெருமை! பேஷ்! எதனல் பெருமை யிருக்கிறதோ எனக்குக் காரணம் தெரியவில்லே” என்று மிக்க அகங்காரத்தோடு கூறினள்.

அம்மாது:—போதும். பேசாமலிரு. வேலேக்காரிகளுக்குக்கேட்கும். என் புத்திரனும் வரும் வேளே யாயிற்று.

கிழவி:—உன் வேலேக்காரரைப்பற்றியும் உன் புத்திரனேப் பற்றியும் எனக்கு அக்கரையேயில்லே. நான் விரும்பினல் வீட்டிற்குள் வந்து என் சொந்த வீடுபோல் அதிகாரம் செய்வேன்.

அம்மாது:—ஒருகாலும் முடியாது. நான் உனக்குத் திருப்தியான பணம் கொடுத்தேனல்லவா? என்னே யேன் இம்சிக்கிருய்?

கிழவி:—“அது சரிதான். முன் நான் வந்திருந்தபோது நீ என்னேப் பயமுறுத்தினயல்லவா? நீ பெருமை பாராட்டுவது வேடிக்கை. இதோ இதை நினேப்பில் வை” என்று குசுகுசுவெனச் சில வார்த்தைகள் மொழிந்தாள்.

அவற்றைக் கேட்டதே பரிதாபமான அம்மாது பெருந்திகிலடைந்து சவம்போல் முகம் வெளுத்து மிக்க மனே வேதனே யடைந்தாள். பரமதுஷ்டியாகிய அச் சண்டாளக்கிழவி தான் உண்டாக்கிய மனேவேதனேயே போதுமென்று திருப்தியடைந்து உடனே அதைவிட்டுச் சென்ருள். தேவராஜின் தாயார் உடனே தன் அறைக்குச்சென்று ஆவிசோர்ந்து ஒரு சோபாவில் சாய்ந்து

கண்ணீர்விட்டுப் பிறகு மனந்தெளிந்து மிக்க வெறுப்போடு,

"சண்டாளப்பேய். யோக்கியதையற்ற இம் முண்டை எனக்குச் சனியாய் ஏற்பட்டு வலியவந்து என் பிராணனை வதைக்கிறாள். எனக்கு வரும் கோபம் இச் சனியனை யொழிக்க எத்தகைய பாபகாரியமாயினும் செய்து விடலாமென்று மனம் துணிந்து விடுகிறது..." என்றாள். அச்சமயம் வேலைக்காரிகள் தூரத்திலே யிருந்தார்கள்.

மறுவினாடி தேவராஜன் அறைக்குள் வந்ததும் "கடவுளே! என்ன சங்கதியம்மா நடந்தது? நான் ஏன் உன்னைக் கேட்கவேண்டும். அக்கிழவி யாரோ பரம துஷ்டி. அவள் வெறும் பாசகத்திற்காக வருகிறவளல்ல. உன்னை யென்ன காரணத்தாலோ பயமுறுத்துகிறாள். ஓ! அம்மா! இதில் ஏதோ பெரியமர்மம் இருக்கிறது. என்னதான் சங்கதி? கூறு!" என்று கேட்டான்.

அவன் தாய்:—குழந்தாய். ஒன்று மில்லை அவள் எனக்காக வரவில்லை. உண்மையாய்க் கூறுகிறேன். நான் ஏதோ விஷயமாகச் சிந்தித்துக்கொண் டிருந்தேன்.

தேவராஜன்:—அம்மா! என்னை மன்னிக்க வேண்டும். நீ இப்போது மறைத்துப் பேசுகிறாய். உன் வாக்கிலிருந்து வந்த வார்த்தைகளை நான் காதாரக் கேட்டேன். உனக்கு எவ்வளவோ மனவருத்தம், பயம், கோபம் உண்டாகா விட்டால் கருணையும் சாந்தமுமுடைய உன் வாக்கிலிருந்து அத்தகைய பயங்கரமான வார்த்தைகள் வெளிவரா.

தாயார்:—குழந்தாய்! சில சமயங்களில் என்மனம் அடையும் வியாகூலத்தால் என்னை யறியாமலே நான் என்னென்னவோ கூறுகிறேன். அதுவே என்

மனதிற்குச் சொல்லொணு வியாகூலத்தை யளிக்கிறது. இன்னும் அதைப்பற்றி கேட்டால் என் மனம் அதிக வேதனேயே யடையும்.

தேவராஜு தன் தாயாரிடம் மிக்க பக்தி விசுவாசமுடையவன் ஆகையால் "அம்மா போதும், இனி அதைப்பற்றி நான் பேசவே மாட்டேன். நாம் உலவப் போவோம்......வேண்டாம். அது சம்பந்தமாக ஒரு வார்த்தைகூட மொழிய வேண்டாம். உன் மனதிற்கு எள்ளளவு வியாகூலத்தை யளிப்பதாயினும் அத்தகைய விஷயத்தை நான் ஒருபோதும் செய்யவே மாட்டேன்" என்று திடமாகக் கூறினுன்.

சற்றுநேரத்திற்குள் தேவராஜும் அவன் தாயாரும் உலவுவதற்காக வெளியிற் சென்ருர்கள். இனி சுகவிலாசத்திலிருந்த நீலாட்சியைக் கவனிப்போம்.

ஞானம்பாள் அறைக்குள் வந்ததும் செல்வாம்பாளும் நீலாட்சியும் தங்கள் சம்பாஷணையை நிறுத்தி விட்டார்கள். நீலாட்சி சற்று நேரங்கழித்து சகோதரிகளிடம் விடை பெற்றுக்கொண்டு அங்கிருந்து புறப்பட்டாள். அச்சுதனுக்கும் தேவராஜுக்கும் சண்டை நடந்த சங்கதி அவளுக்குத் தெரியாது. லாயர் தம்புசாமிப் பிள்ளே யதைப்பற்றி யவள் முன் பிரஸ்தாபிக்க வில்லே. அதனல் சகோதரிகளிடம் வந்துகொண் டிருந்த அச்சுதன் இனி வரமாட்டான் என்று செல்வாம்பாள் கூறியதன் காரணம் அவளுக்கு விளங்கவில்லே. ஆயினும் செல்வாம்பாள் தன் சகோதரி வருகிருள் என்று அப்பேச்சை நிறுத்தி விட்டதால் அதில் என்னவோ மர்மம் இருக்கிறதென்று மட்டும் அவள் மனதிற்பட்டது.

சுகவிலாசத்தை விட்டுப் புறப்பட்ட நீலாட்சி நேராய் விட்டிற்குப் போகாமல் அப்பிரதேசத்தில் சற்று

உலவிக்கொண் டிருந்து செல்லலாமென்று கருதினள். அவள் சற்றுதூரம் சென்றபோது, தூரத்தில் ஒரு மாது செல்வதைக் கண்டாள். உற்று நோக்கியதும் அவள் சின்னம்மாள் என்ற கிழவியென்று தெரிந்து கொண்டாள். அவள் மனதில் மிக்க வெறுப்பும் கோபமும் உண்டாயின. "இத்துஷ்டச் சண்டாளி என் விவகாரத்தில் குறுக்குவரத் தீர்மானித்திருக்கிருள். இன்றேல் இவள் இப்போது இங்கேன் வரவேண்டும்" என்று தனக்குத்தானே கூறிக்கொண்டாள். உடனே வேறு வழியில் திரும்பி விடலாமென்று கருதினள். "எனக்குச் சம்பந்தப்பட்ட விஷயத்தில் இவள் வந்து நுழைவதாயின் எனக்கு இக்கட்டுகளுண்டாய்விடும். இச்சண்டாளியால் என் காரியங்கள் கெட்டே போய்விடும். எனக்கோ கஷ்டமான வேலை யிருக்கிறது. அதை நான் மிக்க எச்சரிக்கையோடு செய்யவேண்டும். இக்கழுதை இடையில் பிரவேசித்தால் எல்லாம் கெட்டுப்போம்; அதிலும் இந்தச் சண்டாளியாகிய துஷ்டி என் விஷயங்களில் குறுக்கே நுழைவதென்றால் சேசே இவளை யொழித்தே விடுவேன். அதற்காக என்ன செய்தாலும் சரி" என்று இவ்வாறு சிந்தித்துக்கொண்டே துரிதமாக நடந்து அக்கிழவியருகிற் சென்று துணிகரத்தோடு,

"உன்னிடம் ஒரு சங்கதி பேசவேண்டும். என் கூடவா!" என்றுள். இவள் அக்கிழவியின் கையில் சிக்கியில்லாமல் அக்கிழவி யிவள் கைக்குள் அகப்பட்டிருப்பது போல் அதிகாரத்தோடும் தைரியத்தோடும் கூறினள். நீலாட்சி யவ்வாறு கூறிவிட்டு அத்தோட்டத்தில் இருந்த ஒரு சிறியசந்தில் நுழைந்து சென்று மறைவான ஒரு இடத்தில் நின்று திரும்பிப் பார்த்தாள்.

கிழவி அவள் பின்னல் சென்றுள். அவள் வார்த்தை

களால் கிழவி பயந்துவிடவில்லை. கிழவி தன்னருகில் வந்ததும் நீலாட்சி அவளை யுற்றுநோக்கிப் பயங்கரமான பார்வையோடு, "நீ என்னத்திற்காக இந்தப் பிரதேசத்தில் வந்து நடமாடிக்கொண் டிருக்கிறாய்?" என்றாள்.

கிழவி சற்றும் அஞ்சாமல் "இந்த நகரத்திலுள்ள வீதிகளிலும் சந்துகளிலும் உலவுவதற்கு உனக்கெவ்வளவு சுதந்தரம் இருக்கிறதோ அவ்வளவு சுதந்தரம் எனக்குமுண்டல்லவோ?" என்றாள்.

நீலாட்சி:—"இந்த அதிகப் பிரசங்கித் தனத்தால் ஒரு பயனுமில்லை. நான் முன்னமே யுனக்குக் கண்டிப்பாய் எச்சரிக்கை செய்திருக்கிறேன். இப்போது நீ என் விஷயத்தில் வந்து குறுக்கிடுகிறாய்" என்று கண்களில் கோபத்தனல்வீசக் கூறினாள்.

கிழவிக்கு மிக்க தைரியத்தோடு பதில் கூற அச்சமாகவே யிருந்தது. ஏனெனில் நீலாட்சியின் பார்வையில் ஒருவிதப் பயங்கரமான விகாரமுண்டாயிருந்தது. அப்படியிருந்தும் அவள்,

"உன் எச்சரிக்கையை நான் சட்டை செய்யமாட்டேனென்றால் என்ன? பதிலுக்கு நான் பயமுறுத்தினாலென்ன?" என்றாள்.

நீலாட்சி:—"நீ முன்னமே என்னிடம் இம்மாதிரி கூறியிருக்கிறாய். உன் மிரட்டலை நான் சட்டைசெய்ய மாட்டேனென்று கூறிவிட் டிருக்கிறேன். நீ என்னைப்பற்றி என்ன உளறினாலும் உளறிக்கொள். இதோபார் நான் வஞ்சம் தீர்த்துக்கொள்ளத் துணிந்தால் ஒரே முரட்டுப் பிடிவாதமுடையவள். நீ மறுபடி என் விஷயங்களில் குறுக்கிட்டால் இதோ பார் ஒரு புழுவை நசுக்குவது போல் உன்னை நசுக்கி விடுவேன். நான் உன் மிரட்டலுக்குப் பயப்படவில்லை

பென்பதை யிப்போதறிந்துகொள். நான் சுபாவத்தில் நல்லவள், இரக்கமுடையவளே. ஆயினும் எனக்கு இடையூறு செய்பவர்களைத் தொலைத்துவிட வேண்டியிருந்தால் அதற்காகச் சற்றும் அஞ்சாமல் எத்தகைய காரியத்தையும் செய்துவிடுவேன். ஆம் எக்காரியமாயினும் சரி.'' என்றாள்.

கிழவியின் மனதில் திகில் உண்டாயிற்று. ஏனெனில் அச்சமயம் நீலாட்சியின் முகவிகாரம் பயங்கரமாக விருந்தது; அதோடு அப்போது அவர்கள் இருக்குமிடமோ இருபுறங்களும் வேலிகளால் மறைக்கப்பட்ட நெருக்கமான சந்து. உள்ளே திகிலோடு அக்கிழவி நீலாட்சியை யுற்று நோக்கி "ஆ! அப்படியாயின் என்னைக்கொன்று விடுவாயோ?'' என்றாள்.

நீலாட்சி:—"உன்னைக் கொன்றுவிடுவதா? என் எதிரில் ஒரு பாம்புக்குட்டி இருந்தால் பாதரட்சை யணிந்த காலால் அப்படியே யதை மிதித்துத் தேய்த்து விடுவேனென்று கேள். விஷமுள்ள ஒரு தேள் எதிரில் புலப்பட்டால் அதை நசுக்கி விடுவேனென்று கேள். நீ அத்தகைய துஷ்டப் பூச்சிகளிலும் மிக்க கொடியவளென்று முன்னமே பன்முறை யுன் முகத்திற்கு முன்னால் கூறியிருக்கிறேன். உன் போன்ற சண்டாளியை யொழிப்பதற்கு எத்தகைய பாதகத்தைச் செய்தாலும் தகும்.'' என்றாள்.

கிழவி இச்சமயம் பக்குவமாகத் தப்பித்துக்கொள்ள வேண்டுமென்று தனக்குள் சிந்தித்துக்கொண்டு "சரிதானம்மா. நீ என்னைப் பயமுறுத்தக் கருதிவிட்டாய். என்னை உன் விரோதியாகவும் கருதிவிட்டாய். நான் அப்படிக் கெட்ட எண்ணங்கொண்டு இங்கு வரவில்லை. இப்பிரதேசத்தில் வந்திருந்தால் இங்கு உன் சம்பந்தமான

விஷயங்கள் ஏதேனும் நிகழும். கண்டறிந்து வந்து உனக்குத் தெரிவிக்கலாமெனவே வந்தேன்'' என்றாள்.

நீலாட்சிக்கு இவளுடைய நயவஞ்சக மொழியைக் கேட்டதே அடங்காக் கோபம் வந்து விட்டது. அவள் நிமிர்ந்து நின்று சிங்கத்தைப் போன்று கர்ச்சித்து கண்கள் கோபத்தனல் வீச அக்கிழவியை நோக்கி,

''அடி சண்டாளி! இன்னும் எனக்குக் கோபமூட்டத் தக்க ஒரு வார்த்தையேனும் கூறினையோ நான் என்ன செய்வேனே தெரியாது. எனக்குப் பயங்கரமானகோபம் வருகிறது. பத்திரம்! இனி யொரு கணமேனும் பொறுக்க முடியாது. இனி யுன் பாழ்முகத்தில் விழிக்கவே யெனக்குப் பிரியமில்லை யென்று நான் பன்முறை கூறும்போது நீ இன்னும் எனக்குக் குறுக்காய் வந்துகொண் டிருக்கிறாய். இனி யொருவார்த்தை கூறினையோ, இப்படியே யுன்மேல் வேங்கைபோல் பாய்ந்து உன் நெஞ்சைப் பிடித்து ஒரு இறுக்காய் இறுக்கிவிடுவேன். இவ்வளவே கடைசியாய்க் கூறிவிட்டேன். கேட்டுக்கொண்டாயல்லவா? இனிநட இதைவிட்டுச் சீக்கிரம்'' என்று பூமியை யுதைத்தாள்.

கிழவிக்கு உண்மையாகவே பயமுண்டாகிவிட்டது. பின்னு முன்னும் பார்த்தாள். ஒருவரையும் காணோம். முதலில் ''இவள் நம்மை இப்படிப் பயமுறுத்தினல் நாம் பயந்து போய்விடுவோமென்று இப்படிக் கூறுகிறாளேயன்றி, உண்மையில் இவள் இரகசியம் நம்மிடம் சிக்கியிருக்கிறவரையில் இவள் நமக்கு பயப்படாமலிருக்க முடியாது'' என்று கருதியே முன்பு தைரியமாகப் பேசினள். இப்போதோ அத்தைரியம் அடியோடு போய்விட்டது. பெருந்திகிலுண்டாயிற்று. இவள் என்ன காரணத்தால் நமது இரகசியத்திற்குப் பயப்படவில்லை

யென்று பிரமை யடைந்தாள்-தான் பலஹீனமான கிழவி யென்பதையும், நீலாட்சி பூரண வலிவுடைய மங்கை யென்பதையும், தாங்கள் இப்போதிருக்கும் ஜனசஞ்சார மற்ற மறைவான விடத்தையும் கருதியபோது அவளுக்குப் பிராணபய முண்டாய்விட்டது. அக்கன்னிகையின் அருகிலிருந்து தப்பித்துக்கொண்டு போய் விட்டால் போதும் என்று நினைத்தாள். ஆகையால் அக்கிழவி யொன்றும் கூருமல் அந்த விடத்தைவிட்டுச் சென்ருள். சற்று தூரத்தில் சென்றபோது கொஞ்சதூரம் முன்னே இச்சந்து போய் பெரிய பாதையிற் கலப்பதைக்கண்டு திரும்பிப்பார்த்தாள்.

நீலாட்சி நின்ற விடத்தைவிட்டுப் பெயராமலே யிருப்பதைக் கண்டாள். இப்போது தான் பெரிய பகிரங்கமான பாதைக்கருகில் வந்துவிடவே அவளுக்குச் சற்று தைரியம் வந்துவிட்டது. உடனே தன் கோபத்தை வெளியிடத் துணிந்து நீலாட்சியை நோக்கி "ஓ! என்னையா கொல்வாய். அவ்வளவு அகங்காரமா வுனக்கு, இதுமுதல் என்னைக் கொடிய விரோதியாக்கிக் கொண்டாய். இருவரும் ஒருகை பார்ப்போம். நீ யென்னை யலட்சியம் செய்வதைச் சற்று காட்டுகிறேன்" என்று உறத்துக் கூவிவிட்டுச் சட்டென்று திரும்பி துரிதமாக நடந்து சென்ருள்.

நீலாட்சி இரண்டு மூன்றடிகள் சென்ருள். உடனே ஏதோ சிந்தித்துக்கொண்டு தட்டென்று நின்று அக்கிழவி செல்வதைப் பார்த்துக்கொண்டே யிருந்து அவள் தன் கண்களுக்கு மறைந்ததும் அதேதிக்கை நோக்கிநடந்தாள். ஆனல் செல்லும்போது தனக்குத்தானே முணமுண வென்று என்னவோ கூறிக்கொண்டே சென்ருள். அச்சமயம் அவள் முகத்தில் உண்டான கருத்த விகா

ரத்தை யொருவர் கண்டால் அவள் மனதில் அச்சமயம் மிக்க பயங்கரமான சிந்தனையிருக்கிறதென் றுணரலாகும்.

இப்போது நாம் சுகவிலாசத்தில் அங்குள்ள வேலைக்காரியாகிய இராஜாம்பாளோடு விட்டுவந்த உண்ணுமுலையைக் கவனிப்போம். இர்ராஜாம்பாள் அக்கன்னிகையை நோக்கி இரகசியமாய்,

"குழந்தாய்! உன் பாட்டனுருடைய வியாச்சியம் அவருக்கு அனுகூலமாக முடியுமென்று கருதுகிருயா?" என்ருள்.

உண்ணுமுலை:—என்னல் நிச்சயமாகக் கூற எப்படி முடியும்? ஆயினும் அப்படித்தான் அவர் நம்பியிருக்கிருர்.

இரா:—யார் உன் பாட்டனுருடைய வக்கீல்?

உண்:—"லாயர் தம்புசாமிபிள்ளை" என்ருள்.

இதைக்கேட்டதே இராஜாம்பாள் திடுக்கிட்டு "என்ன? தம்புசாமிபிள்ளையா? என்ருள்.

உண்ணுமுலை:—ஆம். முதலில் வேலாயுதம் பிள்ளைதான் என் பாட்டனுருடைய வக்கீலாக விருந்தார். அவர் இறந்தபின் தம்புசாமிபிள்ளை பார்க்கிருர். சுமார் இருபது வருடங்களுக்கு அதிகமாகவே இவ்வியாஜ்ஜியம் நடந்து வருகிறது. என்பாட்டன் அது முதல் கடன்காரர் சிறைச்சாலையில் இருந்துவருகிருர்.

இரா:—உன்பாட்டனுருக்குப் பெருந்தொகையான கடன் இருக்கிறதோ?

உண்ணு:— இல்லை - அசல்கடன் சொல்பமே, அதற்கு வட்டிக்கு வட்டிசேர்த்து இப்படி அதீதப்படுத்துவதாக யாவரும் கூறிக்கொள்ளுகிருர்கள்.

இரா:—இருக்கட்டும். லாயர் தம்புசாமிபிள்ளை உன்பாட்ட

ணர் விவகாரத்தைச் சரியாக நடத்துகிறாரா? பயப்ப டாதே உன் அபிப்பிராயத்தை யுள்ளபடிகூறு.

உண்ணு:—அவர் கருதியிருந்தால் இதைவிடச் சுறுசுறுப்பாய் இதை முன்னமே முடிவிற்குக் கொண்டு வந்திருக்கலா மென்று என் பாட்டனாரும் வேறு இரண்டொருவரும் கூறுகிறார்கள்.

இரா:—"என் எஜமானிகள் லாயர் தம்புசாமிப் பிள்ளையின் குடும்பத்திற்கு மிக்க வேண்டியவர்கள். அடிக்கடி அங்கு செல்வார்கள். லாயர் வேலாயுதம் பிள்ளையின் பேத்திமார்களே யிவர்கள் என்பதை நீ அறியாயோ?" என்றாள்.

இதைக்கேட்ட உண்ணுமுலை மிக்க வியப்பும் சந்தோஷமு மடைந்து, "ஹா! எனக்கு அது தெரியாது. இது என்னுடைய நல்லதிட்டமே. ஆகா என்பாட்டனார் விஷயத்தைப்பற்றி தம்புசாமி பிள்ளைக்கு மட்டும் இரண்டொரு வார்த்தைகள் தயவுசெய்து கூறுவார்களானல் பெரும் புண்ணியமாகும்." என்றாள்.

இராஜ:—"சகோதரிகள் இருவரும் நல்லவர்களே யெனினும் செல்வாம்பாள் இவற்றிலெல்லாம் தலையிட மாட்டாள். ஞானம்பாளோ கட்டாயம் உனக்காகச் சந்தோஷத்தோடு இதைச் செய்வாள். நான் இதைப்பற்றி அவளிடம் பேசுவேன்" என்றாள்.

அதன் பின் உண்ணுமுலை மிக்க சந்தோஷத்தோடு விடைபெற்று ஞானம்பாள் கொடுத்த தையல் சாமான்களைப் பெட்டியில் வைத்துத் தூக்கிக்கொண்டு புறப்பட்டாள்.

16 - வது அத்தியாயம்.

அயோக்கிய சகவாசம் ஆபத்துக்கிடம்.

உண்ணுமுலே சுகவிலாசத்தைத் தாண்டி சற்றுதூரம் கடந்து சென்றபோது, ஒரு ஆடவன் வருவதைக் கண்டாள். உடனே அவன் யாரென்று தெரிந்து கொண்டாள். அவனும் இவளே யறிந்துகொண்டான். அந்த ஆடவனுக்கு வயது சுமார் நாற்பது இருக்கும். நல்ல நாணயமான உடையணிந்து பெரியமனிதனுகவே தோன்றினுன். அவன் உண்ணுமுலேயைச் சந்தித்ததும், "ஆ உண்ணுமுலே! நீ இங்கே ஏன் வந்தாய்-உன்னிடம் ஒரு சங்கதி கூறவேண்டும். ஆனல் இந்த இடம் தகுதியல்ல. இங்கு நின்று பேசினல் உன் மரியாதைக்கு ஊனமாகும். சற்றுதூரம் போவோம்" என்று முன்னே நடந்து சென்ருன். உண்ணுமுலே பின்னல் சற்று தூரத்திலேயே சென்ருள். சுமார் பத்து நிமிடங்கள் நடந்தபின் அந்த ஆடவன் ஒரு விடத்தில் நின்ருன்.

அவன் நின்றவிடம் முன்பு நீலாட்சியும் சின்னம்மாள் என்ற கிழவியும் நின்று பேசியவிடமே. அங்கிருந்து பெரிய பாதை சற்று தூரத்தில்தான் இருக்கிறது. ஆனல் அப்பாதையில் செல்வோர்க்கு அங்கு நிற்போர் தெரியாது. இரண்டொரு நிமிடங்களில் உண்ணுமுலே அவன் இருக்குமிடத்தில் வந்து சேர்ந்தாள். அவன் அக்கன்னிகையை நோக்கி, "உன் பாட்டனர் சுகமாகவிருக்கிருரா ?" என்ருன். அவன் அன்போடும் இரக்கமான பார்வையோடும் அவ்வாறு கேட்டான்.

உண்ணுமுலே தன் கரத்திலிருந்த பெட்டியைக் கீழே வைத்துவிட்டு அவனே யேறெடுத்துப் பார்த்து மறுபடி

நாணத்தோடு சற்று தலை குனிந்தபடி "அவர் சுகத்தோடேயே யிருக்கிறார். இப்போது மறுபடி ஜெயமடைவோம் என்ற நம்பிக்கையோ டிருக்கிறார். ஆனால் அவர் ஆவலே யவருக்கு அதிக நம்பிக்கையை யுண்டாக்கிவிட்டிருக்கிறதென்று கருதுகிறேன்." என்றாள்.

ஆடவன் சற்று சிந்தித்து "இன்று நான் உனக்கு ஏதேனும் சிறு உதவி செய்பலாகுமா? இன்று உன்னை எதிர் பாராவண்ணம் சந்தித்தேன். ஆயினும் ஏதேனும்." என்றான்.

உண்ணுமுலை:—ஐயா! வேண்டாம். நான் இதுவரையில் தங்கள் உதவியை, தருமத்தைப் பெற்றுக் கொண்டேன்.

ஆடவன்:—அத்தகைய மொழிகளைக் கூறவேண்டாம். அதனால் என்மனதிற்கு அதிக வேதனை யுண்டாகிறது. உனக்கு எவ்வளவோ சுதந்தரமில்லையா? நான் எவ்வளவோ கடமைப்பட் டிருக்கவில்லையா?

உண்ணுமுலை:—நான் அப்படிக் கருதவில்லை. என் விஷயத்தில் தங்கள் நடக்கை மிக்க பெருந்தன்மையும் கம்பீரமுமானது. என் வாக்கால் நன்றியான வார்த்தைகளை வெளியிட முடியாமற் போனாலும், என் செய்கையால் காட்டக்கூடாமற் போனாலும், என் மனதில் எவ்வளவு நன்றியிருக்கிற தென்பது கடவுளுக்கும் என் மனசாட்சிக்குமே தெரியும். தங்கள் எதிரில் நின்று தங்கள் முகத்தைப் பார்க்கவே எனக்கு நாணமாக விருக்கவேண்டும்.

ஆடவன்:—ஓ! உண்ணுமுலை, இது முட்டாள்தனம். நீ இவ்வாறு கூறுவதால் என் மனம் சொல்லொணு வேதனை யடைகிறது. நீ இவ்வாறு கருதலாகாதென்று நான் பன்முறை கூறியிருக்கிறேன். என்

மனதில் உன்னைப்பற்றி எவ்வாறு கருதுகிறேனென் பதை நீ யறிவாய். அப்படிக்கின்றேல் என் நடக்கை யிவ்வாறிராது. நீ மனவியாகூலத்தை விட்டு உற்சா கத்தோ டிருக்கமுயல்.

உண்ணாமுலை தடுமாற்றமான குரலோடு “ நான் தங் களைச் சந்திப்பது இதுவே கடைசி தடவையென்று கருது கிறேன். இருக்கும் சந்தர்ப்பத்திற்கு, இனியும் உலகில் நாம் இருவரும் சந்தித்தாலும்...'' என்றதே,

அந்த ஆடவன்:—ஓ கடவுளே ! நீ இவ்வாறு நாம் மறுபடி சந்திக்க மாட்டோ மென்று கூறுவதன் காரண மென்ன ?

உண்ணா: — நான் இப்போது ஒரு வீட்டிலிருந்து வெளி வந்ததைக் கண்டீரல்லவா ? அந்த வீட்டிலுள்ள ஒரு கன்னிகை எனக்கு மிக்க அன்பான இரட்சகியாக ஏற்பட்டிருக்கிறாள். அவள் மிக்க பெருந்தன்மை யுடைய யோக்கியவதி; என் கஷ்டத்தை யுணர்ந்து தானே எனக்கு நேராய் வேலைகள் கொடுத்து மிக்க தாராளமான கூலி யளிக்கிறாள். இனிமேல் நான் தாங்கள் எனக்கு உதவி செய்யும்படி தங்களுக்குக் கஷ்டம் கொடுக்க வேண்டுவதில்லை யென்று நம்பு கிறேன்.

ஆடவன் மறுபடி சற்றுநேரம் சிந்தித்துப் பிறகு “ நீ யுண்மையாகவே இப்படிக் கூறுகிறாயோ, அல்லது என் உதவியை மறுத்துவிட உத்தேசித்து இப்படிக் கூறு கிறாயோ ?'' என்றான்.

உண்ணா:—இல்லையில்லை. உண்மையே, நான் அப்படித் தங்கள் உதவியை மறுப்பதாயின் உண்மையைக் கூறி விடுவேன்.

அவ்வாடவன்:—ஆம் ஆம். அது உண்மையேயென்றறி வேன். ஆயினும் நான் முன் சொன்னபடி நான் கூற வேண்டுமென் றிருந்ததைக் கூறிவிடுகிறேன். சற்று கவனமாகக்கேள். நீயப்படி என்னை மறுபடி சந் திக்கலாகா தென்று எண்ணியிருந்தால், குறித்த ஒரு விடத்தில் மிக்க இரகசியமாக தவணைப்படி உனக்கு எவ்வளவு பணம் வேண்டுமோ அவ்வளவு உனக்கு வந்து சேரும்படி ஏற்பாடு செய்கிறேன். உனக்கு எவ்வளவு பிரியமோ அவ்வளவு'' என்றான்.

உண்ணாமுலை ''இல்லையில்லை. எனக்குத் தங்கள் உதவி வேண்டாம். எனக்கு மட்டுமாக விருந்தால் நான் இந்த உதவியை யேற்றுக்கொள்ள மாட்டேன். என் பாட்டனு ருக்காக ஏற்றுக்கொள்ள வேண்டியதா யிருந்தது'' என்றாள்.

அந்த ஆடவன்: — ''ஆயின் இனியுனக்குப் போதுமான வருமானம் கிடைக்குமென்று கருதுகிறாயா?'' என்றான்.

உண்ணா:—ஆம். அப்படித்தான் நம்புகிறேன். அப்படிக் கின்றேல் என் பாட்டனுருக்காகத் தங்கள் உதவியை ஏற்றுக் கொள்வேன். சற்று முன்னே நான் தங்க ளைப்பற்றி இத்தகைய தீர்மானங் கொண்டபோது தங்களைச் சந்தித்தால் தங்களிடம் அனேக விஷயங் களைப்பற்றி கூறவேண்டுமென் றிருந்தேன். இப் போது திடீலென்று சந்தித்ததாலோ, அல்லது என் மனதிலுண்டான கலக்கத்தினுலோ, எதனாலோ இப் போது அவற்றை யெல்லாம் சொல்லக் கூடவில்லை. ஒன்றுமட்டும் கூறுவேன். அதுமட்டும் நிச்சயம். அதாவது இப்போது தங்களைப்பற்றி என்மனதில் எவ்வித உணர்ச்சி யிருக்கிறதோ அது மட்டும் எப்

போதும் இருக்கும். இனி நாம் பிரிந்துபோகவேண்டியதே" என்றாள்.

அந்த ஆடவன் சற்று நேரம் முகவாட்டத்தோடு அவளை யுற்றுநோக்கிவிட்டுச் சரி, அப்படியே பிரியப்படி செய் என்றான். உண்ணாமுலை அதைவிட்டுச் சந்தின் வழி நேரே சென்றபோது, அவன் சற்றுநேரம் அங்கு நின்று பார்த்துக் கொண்டே யிருந்துவிட்டுப் பிறகு சென்றான். உண்ணாமுலை அந்த நெருக்கமான சந்தில் மனவாட்டத்தோடு மெதுவாய்ச் சென்று கொண்டே யிருந்தாள். அச்சமயம் அருகிலிருந்த செடிகளினிடையிலிருந்து யாரோ வருவது போல் சலசலவென்ற ஒருவிதச் சத்தங்கேட்டது. உண்ணாமுலை திடுக்கிட்டுத் திரும்பிப்பார்த்தபோது சின்னம்மாள் என்ற கிழவி தன்னை நோக்கி வருவதைக்கண்டு தட்டென்று நின்றாள். உடனே அவள் முகத்தில் அச்சமும் வெறுப்புமாகிய ஒரு விகாரம் தோன்றியது.

அதற்குள் கிழவி அவளருகில் வந்து "ஓகோ! உண்ணாமுலை! சற்று முன்னே அந்த வாலிபனோடு நீ பேசிக்கொண்டிருந்ததை நான் பார்த்தேன். இன்று எப்படியோ நான் எனக்கு அறிமுகமான பழைய ஆட்களில் பலரைச் சந்திக்கிறேன். ஓகோ! என் உன் முகத்தில் இத்தகைய விகாரம் உண்டாயிருக்கிறதே. என்ன? நீ கூட பெருமை காட்டப்போகிறாயோ?" என்றாள்.

உண்ணாமுலை:—உன்னை அவமரியாதை செய்ய நான் கருதவில்லை. ஆனால் நீ சந்திக்காமல் அறிமுகமில்லாதவள் போல் நடந்துகொண்டால் நலமாக விருக்கும்.

கிழவி:—"ஓகோ! அதாவது உன் பழைய சினேகியைக்

காண்பது உனக்கு அவமானமாய்த் தோன்றியது போலும்'' என்ருள்.

இந்த அயோக்கியமும் அக்கிரமுமான நடக்கையுடைய பரமதுஷ்டி தன்னைச் சினேகி யென்று கருதியது உண்ணுமுலைக்கு மிக்க வெறுப்பையும் கோபத்தையும் உண்டாக்கியது. அவள் மனம் வேதனையடைந்தது. அதனல் ஆத்திரத்தோடும் வெறுப்போடும் "சினேகியா?'' என்ருள்.

கிழவி அகங்காரத்தோடு பயமுறுத்துகிறவள் போல் "ஆம் தடையென்ன? நான் உன் சினேகியாக நடந்து கொள்ளவில்லையோ. நீ இப்போது மிக்க வாஞ்சையோடு பேசிக்கொண்டிருந்த அந்த வாலிபன் உனக்கு நேசமானது என்னலல்லவோ'' என்ருள்.

இவள் வார்த்தைகளைக் கேட்டதே களங்கமற்ற அவளுடைய மனம் தீப்பட்டெரிந்தது. அவளுடைய சாந்தம் மழுங்கிவிட்டது. அவள் ஆத்திரத்தோடு,

''துஷ்டக்கிழவியே ! ஒழிந்துபோ ! நீ கூறும் ஒவ்வொரு மொழியும் அபவாதமானது. என்னை விட்டுப் போ ! உன் வழி வேறு, என் வழி வேறு. ஏதோ கெட்ட காலத்தால் முதலில் இருவரும் கொஞ்சம் அறிமுக மானலும், இனி யப்படி யிருக்க முடியாது'' என்ருள்.

கிழவி:—''ஒகோ ! இப்படியா சங்கதி ! நீங்களெல்லாரும் இப்படித்தா னிருக்கிறீர்கள். சமயத்திற்கு அவசியமான மட்டும் சினேகமாக நடத்துவதும், அச்சமயம் கடந்தால் மிக்க கௌரவ முள்ளவர்கள் போல் என்னை யலட்சியம் செய்கிறீர்கள். நாளைக்கே வேண்டுமாயின் என் வஞ்சத்தைத் தீர்த்துக்கொள்ளுவேன். உன் பாட்டன் கடன்காரர் சிறைச்சாலையில் இருப்பது எனக்குத் தெரியாதென்று கருதியிருக்

கிருயோ! அவன் உன்னை மிக்க யோக்கியவதி என்று எண்ணிக்கொண் டிருக்கிருன். நான் போய் சங்கதியைக் கூறினல்...'' என்ருள்.

இதைக்கேட்டதே உண்ணுமுலை மிக்க திகிலும் கோபமுமடைந்து "ஓ சண்டாளி! நீ ஒரு பெண் பேயாக விருந்தாலுங்கூட, இத்தகைய அபாண்டமான வார்த்தைகளைக் கூறி எவ்வளவோ துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அந்த வயோதிகனுக்கு இன்னும் மனத்துயரை யுண்டாக்கத்துணிய உனக்கு மனம் வராது. மானிட சுபாவம் அவ்வளவு கெட்டதாயிராது.

கிழவி:—"கெட்டதோ நல்லதோ, நிஜமோ பொய்யோ எனக்குத் தெரியாது...'' என்றதே,

உண்ணுமுலை:—ஓ! என் பாட்டன் என் நடக்கையைப் பற்றி நன்ருயறிவார். உன் அபாண்டமொழிகளை யொருபோதும் நம்பமாட்டார்.

கிழவி:—அப்படி நினையாதே. அக்கிழவன் நம்பும்படிச் செய்ய என்னல் முடியும். அதற்கு அத்தாட்சியிருக்கிறது. இதோ பார் நீ எனக்களித்த மோதிரம். இது உன் தாயாருடைய தென்று கூறியிருக்கிருய். கிழவனுக்கு இது தெரியுமல்லவா? என்று தன் வலது கரத்தின் சுண்டு விரலிலிருந்த மோதிரத்தை அவள் முகத்தின் முன் காட்டினுள்.

அம்மோதிரத்தைக்கண்ட உண்ணுமுலைக்குப் பேரிடி விழுந்ததுபோ லிருந்தது. அவள் மனதில் வெறுப்பும் ஆத்திரமும், கோபமும் அதிகமாய் விட்டது. ஆதலின் கிழவியைக் கோபப்பார்வையோடு நோக்கி, "அடி சண்டாளியே! இம்மாதிரி கலகம் செய்வதில்லை யென்று சத்தியம் செய். இன்றேல் உனக்குப் பெருந்தீங்கு செய்

வேன். இச்சமயம் என் மனதில் ஒரு புலியின் ஆக்கிரிஷம் இருக்கிறது'' என்றாள்.

கிழவி:—"முட்டாள்! பேசாதே! யாரோ வருகிறார்கள்'' என்றாள்.

தேவராஜனும் அவன் தாயாரும் வீட்டிலிருந்து உலவப்புறப்பட்டார்களென்று முன்னம் கூறியிருந்தோமல்லவா? அவர்கள் உலவிக்கொண்டே வந்தவர்கள் திருப்பத்தில் திரும்பித் திடீலென்று இவர்கள் இருவரும் இருக்கும் இடத்தருகில் வந்து விட்டார்கள். தேவராஜன் அவர்கள் இருவரையும் கண்டதும், "ஆ! அத்துஷ்டக்கிழவியே! என்றான்.

தேவராஜின் தாய் தன் புத்திரனை நோக்கி "நீவா! மகனே! நீ வந்துவிடு வந்துவிடு, அதில் பிரவேசிக்கவேண்டாம்'' என்றாள்.

தேவராஜன்:—"அம்மா! நான் இதற்குச் சும்மாயிருக்கலாகாது. இக்கிழவி அக்கன்னிகைக்கு ஏதேனும் கெடுதிசெய்வாள். அதைத் தடுக்க வேண்டியது என் கடமை.'' என்றான்.

தாயார்:—''வேண்டாம் வேண்டாம் நீ போகவேண்டாம்'' என்று பீதியோடு தன் புத்திரனைப் பிடித்து அத்திருப்பத்தில் இழுத்துக்கொண்டு போய்விட்டாள்.

தேவராஜன்:—"அம்மா, நான் எல்லா விஷயத்திலும் உன் வார்த்தைக்கு மாறு கூறமாட்டேன். ஆனால் இந்த விஷயத்தில் என்னை மன்னிக்க வேண்டும்.'' என்று கூறிக்கொண்டே தன் தாயிடமிருந்து திமிறிக்கொண்டு "இதோ நொடியில் வருகிறேன்'' என்று கூறிவிட்டுக் கிழவியும் கன்னிகையும் இருக்குமிடத்திற்குச் சென்றான்.

அவன் அங்கு வந்தபோது அவர்கள் இருவரும்

ஒருவரையொருவர் கோபத்தோடு முறைத்துப்பார்த்துக் கொண்டிருந்தார்கள். தேவராஜுன் உண்ணுமுலையை நோக்கி "அம்மா! இக்கிழவி உனக்கு என்ன இடுக்கண் செய்கிருள்? என்னை யுனக்குப் பாதுகாப்பாக ஏற்றுக் கொள்." என்ருன்.

கிழவி "அய்யா நீ இதில் தலையிடவேண்டாம். எங்கள் சச்சரவை நாங்களே சமாதானப்படுத்திக் கொள்வோம். உன் வேலையைப் பார்த்துக்கொண்டு நீபோ. இன்றேல், உன் மனதிற்கு மிக்க நோயை யுண்டாக்கத்தக்க ஒரு சங்கதியைக் கூறுவேன்" என்ருள்.

தேவராஜுன்:—"நான் உன் மிரட்டலுக்குப் பயப்படுகிற ஆசாமியல்ல." என்று கூறிவிட்டு, உண்ணுமுலையை நோக்கி "நீ வா! உன்னைப் பாதுகாப்பான விடத்தில் கொண்டுபோய் விடுகிறேன்" என்ருன்.

கிழவி:—"அவள் வரமாட்டாள். அவ்வளவு தைரியமா!" என்று கூறிவிட்டு உண்ணுமுலையை நோக்கி ஒருவிதமான தீட்சணிய பார்வையோடு "உண்ணுமுலை! நீ போகமாட்டாயல்லவா?" என்ருள்.

பாபம் அக்கன்னிகை யென் செய்வாள்! தன் துயரமனைத்தும் அடக்கிக்கொண்டு "அய்யா! நான் இங்கேயேயிருக்கிறேன். நாங்கள் கொஞ்சம் பேசவேண்டிய விஷயமிருக்கிறது. இம் மூதாட்டிக்கு நான் பயப்படவேண்டிய காரணமில்லை. ஆயினும் தாங்கள் எனக்கு உதவி செய்யக்கருதியதற்காகத் தங்களுக்கு மிக்க நன்றியோடு வந்தனமளிக்கிறேன்" என்ருள்.

தேவராஜுன் உண்ணுமுலையை நோக்கி "ஏனம்மா இக் கிழவியிடம் உன்னை விட்டுவிட்டுப் போகவா கூறுகிருய்?" என்ருன். உண்ணுமுலை "ஆம் அய்யா" என்ருள்.

தேவராஜு பார்த்தான். சரி இனி நாம் இக் கன்னிகைக்கு உதவி செய்ய முயல்வது மரியாதையல்ல என்று கருதிக்கொண்டு மன வாட்டத்தோடு அங்கிருந்து திரும்பிச் சென்றான்.

17-வது அத்தியாயம்.

மர்மமான கொலை.

தேவராஜு தன் தாயாரை விட்டுவிட்டு வந்த இடத்திற்குச்சென்று பார்த்தான். அவள் தனக்காக எதிர் பார்த்திருப்பாளென்று அவன் கருதியிருந்தபடியால் மனவாட்டத்தோடு அங்கிருந்து நடந்தான். சற்று தூரத்திலிருந்த திருப்பத்திலிருந்து இரண்டு வழிகள் பிரிகின்றன. இரண்டு வழியாகவும் அவன் தன் வீட்டிற்குச் செல்லலாம். ஒரு வழி சற்றுச் சுற்றுவழி. இன்னொன்று சிக்கிரத்தில் செல்லக்கூடியது. தேவராஜு சமீப வழியே வீட்டை நோக்கிச் சென்றான்.

தேவராஜின் மனதில் முன்னமே ஒரு பெருங் கலக்கமிருந்தது. அதாவது தன் தாயாருக்கும் அக்கிழவிக்கும் ஏதோ மர்மமான சம்பந்தமிருக்கிற தென்பதோடு தன் தாயார் எக் காரணத்தாலோ அவளுக்கு அஞ்சுகிறாள் என்ற பெரிய சந்தேகம் இருந்தது. இப்போது அக்கிழவி தன்னைப் பயங்கரமாக மிரட்டியதால் தன் தாயார் விஷயத்தில் தான்கொண்ட சந்தேகம் உண்மையேயென்று அவன் மனதிற்பட்டது. இதனால் அவன் மிக்க வியாகூலத்தோடு வீட்டை நோக்கிச் சென்றான்.

அவன் வீட்டிற்குச் சென்று பார்த்தபோது தன் தாயார் இன்னும் வரவில்லையென்று தெரிந்தது. கால் மணி நேரம் பார்த்தான்; வரவில்லை. தாயார் ஒரு சமயம்

மற்றொரு வழியாய்ச் சென்று, தான் வரவில்லையென்று பார்த்துக்கொண் டிருப்பாள் என்று கருதி அங்கிருந்து புறப்பட்டான். ஆனால் இப்போது தான் வந்த வழி செல்லாமல் தூரமாகவுள்ள வழியே சென்றான். வழியில் எங்கும் தன் தாயாரைக் காணவில்லை.

தேவராஜு அந்த வழியே பார்த்துக்கொண்டே பாதையைக்கடந்து கிழவியும் உண்ணாமுலையும் பேசிக் கொண்டிருந்த சந்தின் முனைக்கு வந்தான். அங்கிருந்து மற்றொரு வழியே திரும்பப் போனவன், அக் கிழவியும் அக் கன்னிகையும் இன்னும் அங்கேயே இருக்கிறார்களா பார்ப்போமென்று அந்த விடத்திற்குச் சென்றான். அங்கு சென்றதும் அவன் கண்ட காட்சி அவனைப் பிர மித்து நடுங்கச் செய்தது.

கிழவியும் உண்ணாமுலையும் பேசிக்கொண் டிருந்த விடத்தில் அக்கிழவி மல்லாக்க வீழ்ந்து கிடக்கிறாள். இரண்டு போலீஸ்காரர் அவளைக் குனிந்து பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். தேவராஜு அருகிற் சென்று பார்த்தபோது, அக் கிழவியின் கண்கள் நிலைத்து மேலே பார்த்தபடி யிருந்ததையும் வாய் திறந்தபடி யிருந்ததை யும் கண்டதோடு, அப் போலீஸார் திடுக்கிட்டுக் கூறி யதைக் கேட்டதும் அங்கு கிடப்பது சவம் என்றுணர்ந் தான்.

போலீஸ்காரரில் ஒருவன் இங்கு கொலை நடந்திருக் கிறது. தொண்டையை யிறுக்கிக் கொன்றவன் கரங்கள் இரும்புக் கரங்களாக விருக்கவேண்டுமென்றான். மற்ற வன், "கொலை செய்தவன் தன் முழங்காலால் இவள் மார்பை யழுத்திக்கொண்டு நெஞ்சைப் பிடித்து நெறித்து விட்டிருக்கிறான்" என்றான்.

தேவராஜு சற்று கிட்டப்போய் பார்த்து ஆம்

தொண்டையை நெருக்கியே கொல்லப்பட்டிருக்கிருள். "ஆனல் இவளோடு சச்சரவு செய்துகொண் டிருந்த அக் கன்னிகையாக விராது" என்ருன்.

இதைக்கேட்ட போலீஸ்காரரில் ஒருவன் "ஆ! ஒரு கன்னிகை சண்டை யிட்டாளா? அதென்ன சங்கதி கூறுங்கள்" என்ருன்.

தேவராஜன் "இல்லையில்லை அவள் செய்திருக்கமாட்டாள்." என்ருன்.

போலீஸ்காரன்:—"அய்யா! தங்கள் உத்தேசம் எவ்வாருயினும் இருக்கட்டும். தயவுசெய்து நடந்த சங்கதியைக் கொஞ்சம் விவரமாகக் கூறுங்கள்" என்ருன்.

தேவராஜன் இனி சொல்லியே தீரவேண்டுமெனக் கருதிக்கொண்டு "சற்று நேரத்திற்கு முன் நான் என் தாயாரோடு உலவிக்கொண்டே வந்தபோது இக் கிழவியும் ஒரு கன்னிகையும் இந்த விடத்தில் நின்று சச்சரவிட்டுக்கொண் டிருந்தார்கள். அப்பெண் கையில் தையற் சாமான் வைக்கும் பெட்டி யொன்று வைத்துக்கொண் டிருந்தாள். அன்றேல் அவள் யாரோ உயர்ந்த அந்தஸ்திலுள்ள கன்னிகை யென்றே கருதியிருப்பேன்" என்ருன்.

போலீஸ்காரன்.—ஏதேனும் பயமுறுத்தும் வார்த்தைகள் நிகழ்ந்தனவோ?

தேவராஜன் "ஆ! இப்போது நீங்கள் கேட்கவே எனக்கு நினைவு வந்தது. அப்பெண் மிக்க கோபத்தோடு "ஆ! எனக்கு ஒரு புலியைப்போல் ஆக்கிரிஷம் உண்டாயிருக்கிறது" என்ருள். அக்கிழவி அவளுக்கு மிக்க கோபமூட்டி யிருக்கவேண்டும்" என்ருன்.

போலீஸ்காரன்:—ஆ! அப்படிக் கூறினளா? இன்னும் என்ன நடந்தது?

தேவராஜு:—அப் பெண்ணின் முகத்தில் பயங்கரமான விகாரமும் திகிலும் கோபமும் தோன்றியது. அவள் புத்தி சபலித்திருக்குமோ என்றுகூடக் கருதினேன். இக் கிழவி அவள்மேல் என்னவோ ஒரு ஆச்சரியமான அதிகாரம் வைத்துக்கொண் டிருக்கிறாள் என்று தெரிந்தது. ஏனெனில் ஒரு சாதாரணமான மோதிரத்தைக் காட்டி அக் கன்னிகையைப் பயமுறுத்திக்கொண் டிருந்தாள்.

போலீ:—"ஆ! ஒரு மோதிரமா" என்று சவத்தை நோக்கினான். தேவராஜு அம்மோதிரம் கிழவியின் வலதுகரச் சுண்டுவிரலில் இருந்தது என்றான். உடனே போலீஸார் குனிந்து பார்த்து ஆ! அம்மோதிரம் இல்லையென்றார்கள். அவர்களி லொருவன் மற்றொரு கரத்தில் பார்ப்போம் என்றான். உடனே அவர்கள் அக்கரத்தைப் பார்த்தபோது அதில் மூன்று விரல்களில் மூன்று மோதிரங்க ளிருந்தன. தேவராஜு அவற்றைக் குனிந்து பார்த்ததும்,

"ஆ! நான்கண்ட மோதிரம் இம்மூன்றில் எதுவுமல்ல. அது உயர்ந்த அந்தஸ்திலுள்ள மாதரணிவது. அதை நான் நன்றாய்ப் பார்த்தேன். அதின் மையத்தில் ஒரு சிகப்புக்கல்லும் சுற்றிலும் முத்துகளும் வைக்கப்பட் டிருந்தன" என்றான்.

போலீஸார் "ஆ! இது நல்ல அத்தாட்சியே, அவர்கள் பேசியபோது பெயர்கள் ஒன்றும் வெளிவரவில்லையோ?" என்றார்கள்; தேவராஜு "ஆ! நினைவிருக்கிறது, அக்கிழவி அக்கன்னிகையை உண்ணுமலை யென்றழைத்தாள்" என்றான்.

போலீஸார் "சரி! தாங்கள் தயவுசெய்து மரண விசாரணையின்போதும், பின்னால் அப்பெண் அகப்பட்

டால் நியாயஸ்தலத்திற்கும் வரவேண்டும். தங்கள் பெயரையும் விலாசத்தையும் கூறுங்கள்'' என்றார்கள். தேவராஜ அவ்வாறே கூறிவிட்டு விடைபெற்றுக் கொண்டு வீட்டிற்குத் திரும்பினான்.

வழியில் அவன் மனதில் முதலில் பெரியசந்தேகம் உதித்து அதனால் மிக்க வேதனையடைந்தான். ஏனெனில் அவன் தாயார் முன்பு அக்கிழவியைப்பற்றி "சண்டாளி! ஆ இவளை யொழித்துவிட எதுவேண்டுமாயினும் செய்துவிடலாமென்று இச்சமயம் என் மனதில் துணிகரம் உதிக்கிறது" என்று கூறியது அவன் நினைவிற்கு வந்தது. அதோடு சற்று முன்பு தன் தாயார் அக்கிழவியைக் கண்டபோது மிக்க கலவரத்தோடும் ஆத்திரத்தோடும் அவளருகில் செல்லவேண்டாமென்று தன்னைத் தடுத்ததும் நினைவிற்கு வந்தது. இவற்றோடு அக்கிழவி தன்னைப் பயமுறுத்தியதை நோக்கத் தன் தாயார் என்ன இரகசிய காரணத்தாலோ அவள் கரத்தில் சிக்கி யிருப்பதுபோல் அவனுக்குப் புலப்பட்டது. அதுவுமன்றி அங்கு நின்றிருந்த தன் தாயார் இரண்டொரு நிமிடங்களில், தான் திரும்பி வருவதற்குள் எங்குபோய் விட்டாள் என்று கலக்கமுற்றான். நேராய் வீட்டிற்குச் சென்று பார்த்தபோது அவள் அங்கில்லை. கால்மணிநேரம் காத்திருந்தும் வரவில்லையே, மறுபடி இங்கு வரும்போதும் வழியில் காணப்படவில்லையே என்றதால் அவன் மனதில் பெரிய சந்தேகம் தோன்றிவிட்டது.

ஆயினும் சற்று நிதானித்து அங்கு நடந்த சம்பவங்களையெல்லாம் சிந்தித்தான். கிழவியும் உண்ணாமுலையும் சச்சரவிட்டதையும் மற்ற சம்பவங்களையும் சிந்தித்தபோது, "சே! அக்கன்னிகையே அந்தக் கிழவியைக் கொன்றிருக்கவேண்டும்" என்று மனம் தேறினவனாக

மனைக்குள் நுழைந்தபோது தன் அன்னை யங்கு அமர்ந்திருக்கக் கண்டான். உடனே "ஆ! அம்மா! என்னை மன்னிக்கவேண்டும். ஆ படுகொலை" என்றான்.

அவன் தாய் ஆத்திரத்தோடு "என்ன? என்னதான் சங்கதி? பொறுமையாகக் கூறு" என்றாள். தனயன் "அம்மா என்னை மன்னிக்கவேண்டும். ஆ படுகொலை" என்றான்.

அவன் தாய் ஆத்திரத்தோடு "என்ன? என்னதான் சங்கதி? பொறுமையாகக் கூறு" என்றாள். தனயன் "அம்மா அக்கிழவி! அந்தத் துஷ்டக் கிழவி கொல்லப்பட்டாள். நாம் கண்ட அக் கன்னிகையாலேயே" என்றான். அதைக்கேட்ட அவன் தாய் திடுக்கிட்டுப் பிரமித்து "அடடா! அப்பெண் அவளைக்கொன்றாளா! அவள் அத்தகைய பெண்ணாய்க் காணப்படவில்லையே. எதனாலப்படி கருதுகிறாய்?" என்றாள்.

அதன்மேல் வாலிபன் தான் அங்கு சென்று அக் கன்னிகைக்கு உதவி செய்ய முயன்றதும் கிழவி பயமுறுத்தியதும், உண்ணாமலை தன் உதவியை நிராகரித்து விட்டதும், பிறகு தான் வீட்டிற்கு வந்து மறுபடி சென்றபோது கண்ட காட்சியும், போலீஸ்காரரோடு சம்பாஷித்ததும் யாவும் விபரமாகக் கூறினான். யாவும் கேட்ட அவன் தாய்,

"அட கடவுளே! அத்தகைய பெண் கொலைபாதகம் செய்வதினில் மிக்க கோரம்! மிக்க கோரம்! ஆ! என் மைந்தனே! உனக்கு ஒன்று கூறுகிறேன். அதனால் ஒன்றும் கெடுதியில்லை. ஆயினும் கூறுவதால் ஒரு பயனுமில்லை. அதாவது மரண விசாரணைப்போது நீ சென்று சாக்ஷி பகர்வதாயின், அக்கிழவி நம் பின்னால் தொடர்ந்து வந்த சங்கதியைப்பற்றி யொன்றும் கூறாதே." என்றாள்.

186588